344

T.D.R.C : 344

௨-1907.

கிராமாதிகாரி கெஜட்

V211,81
N07
117736

344
344-2
97

Reg. No. M—373.

THE

Gramathikari Gazette.

A MONTHLY JOURNAL IN TAMIL.

HAS A WIDE CIRCULATION

IN

The Tamil Districts of The Presidency

AND

A GREAT BOON BESTOWED UPON THE

VILLAGE OFFICERS.

344
707

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 JUN 1907
MADRAS.

கிராமாதிகாரி கெஜட்.

MADRAS, MAY 1907.

BY

D. B. PARTHASARATHY AIYANGAR.

PRINTED BY R. VENKATESHWAR & Co.,

FOR THE PUBLISHER, AT THE ANANDA STEAM PRESS, MADRAS

1907

வருஷ சந்தா ரூ. 2-2-0. தனிகாபி 0

Copyright Registered.

விளம்பரம்.

மதராஸில் தகுந்த ஹைக்கோர்ட்டு வக்கீல்களிடமிருந்து வெளியூரா
ருடைய ஸிவில், கிரிமினல் முதலிய எல்லாவியவகார விஷயங்களில் உள்ள
பலாபலங்களைக் குறித்து லாபாயிண்டுகளை யெல்லாம் விவரமாய்த்தெரிந்து
கொண்டு அந்த வக்கீல்களின் அபிப்பிராயங்கள் எழுதியனுப்பப்படும். இன்
னம் சென்னை ஹைக்கோர்ட்டிலும், ஸ்மால்காஸ் கோர்ட்டிலும், ஸிடிஸிவில்
கோர்ட்டிலும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளிலும், கக்ஷிக்காரர்களின் ஏஜண்
டாகவிருந்து வியாஜ்ஜியங்களை நடத்திவைக்கப்படும். மனு முதலியவைகள்
செய்யவேண்டியிருந்தாலும் செய்வோம். இன்னம் வியாஜ்ஜியத்தை நடத்தி
வைக்கும் வகையில் என்னென்ன செய்யவேண்டியதா யிருந்தாலும் அவை
களை எல்லாம் சொந்தக்காரரிருந்தால் எப்படி கவலையுடனும் ஜாக்கிரதை
யுடனும் நடத்துவாரோ அதற்கு பத்துமடங்கதிகமான கவலையுடன் பார்த்து
வருவோம். கக்ஷிக்காரர்கள் தஸ்தாவேஜுகளை அனுப்பி ஒரு குறிப்பிட்ட
பாரிஸ்டரிடமிருந்து அபிப்பிராயம் வாங்கியனுப்பச் சொன்னாலும் அதன்
பிரகாரம் வாங்கி அனுப்புவோம்; அல்லது அபிப்பிராயம் வாங்கும்பொருப்பை
எம்மிடம்விட்டாலும் எங்களுக்கிஷ்டப்பட்ட லாயரிடமிருந்து அபிப்பிராயம்
வாங்கி அனுப்புவோம். கேஸ்களை நடத்தத்தகுந்த லாயர்களைத் தெரிந்
தெடுத்து ஏற்பாடு செய்வோம். ஸமஸ்தானாதிபதி, ஜமீன்தார், மிட்டாதார்,
ஜாகீர்தார் முதலியவர்களுக்கு ஸாஸ்வதமான ஏஜண்டாக நின்று அவரவர்கள்
வியாஜ்ஜியங்களை நடத்திவைப்போம். இன்னம் ஸகலவித தஸ்தாவேஜு
களும், பிற்பட்டு தொடர்வழக்கு ஏதொன்றும் வாராமல் இருக்கும் வண்ணம்
வக்கீல்கள் அபிப்பிராயத்தை முன்னதாய்த் தெரிந்துகொண்டு லா பிரகாரம்
மசோதாக்கள் தயார் செய்யப்படும். முக்கியமாய் கூட்டுவியாபார தஸ்தா
வேஜுகள், தாயாதிகளுடைய பாக தஸ்தாவேஜுகள், ஜீவனாம்ஸ தஸ்தா
வேஜுகள், ரிலீஸ்டீட்ஸ் (Release Deeds) என்னும் ஹக்கு விடுதலை
தஸ்தாவேஜுகள், தான விக்கிரய அடமான குத்தகை முதலிய பத்திரங்கள்,
யில் என்னும் மரணசாஸன பத்திரங்கள், தத்து அல்லது ஸ்வீகாரதஸ்தா
ஜுகள், ஸர்வமுக்தியார் நாமாக்கள்யாவும் முன்சொன்ன வகையாய்
பிரகாரம் சரியாய்த் தயார்செய்யப்படும்.

கவர்ன்மெண்டு, ரிவினியூபோர்ட் முதலிய அதிகாரிகளுக்கு கிராமமுனி
ள், கர்ணங்கள், மற்றும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள், குடிகள் வகை
ல் எழுதிக்கொள்ளும் அப்பீல்கள், மனுவர்ஜிகள் முதலியன கிரமப்படி
வர்கள் கோரிக்கை நிறைவேறுமாறு ணகமாயும், வெகுசாதுரியமாயும்,
ப்பழுதில்லாமலும் நல்ல இங்கிலீஷில் எழுதப்படும். ஒவ்வொரு கட்சிக்
சங்கதிகளையும் நாங்கள் பிறருக்கு வெளியிடாமல் வெகு ரகஸியமாய்
போம். சார்ஜுகள் வியவகாரத்திற்குத் தக்கபடியாயும் ஸரஸ
இருக்கும்.

ரம்பத்தில் சொற்ப செலவிற்காகவும், கஷ்டத்திற்காகவும், காலத்தில்
னபடி நடவடிக்கைகள் நடத்தாததால் அநேகர் தம் வியாஜ்ஜியங்களை
ாத்துக்களையும், உத்தியோகங்களையும், கௌரவத்தையும் போக்கடித்
ண்டு பாழாய்ப்போயிருப்பதை நாம் தினந்தோறும் பார்க்கிறோமல்லவா?
மலமாய் கக்ஷிக்காரர்களுக்கு ரிஜிஸ்டர் லாயர் நோட்டீஸ்கள் வெகு
க் கொடுக்கப்படும். ஆகையால் தாமதம் செய்யாதேயுங்கள். விபரங்
அடியிற்கண்ட மேலவிலாஸத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.
ழுதும்போது ரூ. 5 அட்வான்சு அனுப்பிக் கடிதம் எழுதவேண்டும்.
ய் 5ம் விவகாரம் நடந்தால் எங்களுடைய கமிஷனில் தள்ளிக்
டும். இல்லையேல் வாபீஸ் செய்யப்படும்.

Apply to :—**GENERAL AGENCY,**
22. Ebramji Saib Street, MADRAS.

OFFICE OF THE REGISTRAR ... 27 JUN 1907 MADRAS

GRAMATHIKARI GAZETTE.

கிராமாதிகாரி கெஜட்.

மதராஸ் கவர்ன்மெண்ட் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கிராமாதிகாரி
களின் நன்மையின்பொருட்டும் ஜமீன்தார் மிட்டாதார்
சுரோத்ரியதாரர்களின் நன்மையின்பொருட்டும்
மாதம் மாதம் வெளியிடப்படும்.

சென்னப்பட்டணம், 1907 ௵ மே ௴.

ACT No. IV of 1907.

1907-ம் ௵த்து 4-வது ஆக்ட்.

(தள்ளிவிடப்பட்ட வரிவீதங்களுக்கும் ஸெஸ்ஸுகளென்னும் மேரைத் தீர்வைகளுக்கும் சம்பந்தப்பட்ட சில சட்ட திட்டங்களை ரத்துசெய்வதற்கும் திருத்துவதற்கு மான ஆக்ட்.

அடியிற்கண்ட ஷெட்யூலிற் குறிக்கப்பட்டுள்ள பிரதேசத்தின்மேல் விதிக்கத்தக்க சில வரிவீதங்களும் மேரைத்தீர்வைகளும் தள்ளிவிடப்பட்டிருக்கிறபடியாலும், அதனால் அந்த ஷெட்யூலிற் குறிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களை ரத்துசெய்வதோ அல்லது திருத்துவதோ யுக்தமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை (வரிவீதங்களுக்கும் மேரைத்தீர்வைகளுக்கும் சம்பந்தப்பட்ட ஆக்டுகளை) ரத்துசெய்வதற்கும் திருத்துலதற்குமான 1907-ம் ௵த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

ஷெட்யூலிற் கண்ட சட்டதிட்டங்கள் ரத்து செய்யப்படுவது அல்லது திருத்தப்படுவது.

2. ஷெட்யூலிற் குறிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் - அந்த ஷெட்யூலின் 3-வது கலத்திற்கண்ட அளவுக்கும் மாதிரியாயும் ரத்துசெய்யப்படும் அல்லது திருத்தப்படும்.

ஷெட்யூல்.

A.—சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி.

சென்னப்பட்டணம் 1893-ம்வருஷத்து 4-வது ஆக்ட் (சென்னப்பட்டணத்து 1893-ம்வருஷத்திய கிராமமேரைத் தீர்வை ஆக்ட்.)

ஆக்ட் முழுவதும் ரத்துசெய்யப்படும்.

3-வது பிரிவு :

(I) குறிப்பிட்ட பகுதிக்குப் பர்த்தியாக அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் :—

சென்னப்பட்டணம் 1895-ம்வருஷத்து 3-வது ஆக்ட் (சென்னப்பட்டணம் பரம்பரையானகிராம உத்தியோகங்களைப் பற்றிய 1895-ம்வருஷத்து ஆக்ட்).

" (I) ரயத்வாரி கிராமங்களிலாவது கிராமபரிபாலன காரியத்துக்காக ரயத்வாரி கிராமங்களோடு சேர்த்துத் தொகுக்கப்பட்டிருக்கும் இனும் கிராமங்களிலாவது ஏற்பட்டுள்ளவைகளும் கீழேசொல்லியிருக்கிற ஆறு வகைகளைச் சேர்ந்தவைகளுமாகிய பரம்பரையான கிராம உத்தியோகங்களுக்கு அவ்வவ்விடங்களில் என்ன பெயர் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் சரி அந்த உத்தியோகங்கள். மேலே சொன்னவகைகள் எவையென்றால் :—

(i) கிராம முன்ஸிபுகள்,
(ii) பொட்டெல்கள், மணியக்காரர்கள், பெத்தகாப்புகள்,
(iii) கர்னங்கள்,
(iv) தண்ணீர் பாய்ச்சுகிறவர்கள்,
(v) வெட்டியான், தோட்டிகள், தண்டல்காரர்கள்,
(vi) தலையாரிகள்

இன்ன உத்தியோகஸ்தர்கள் மேலே சொன்னவகைகளில் இன்ன வகையைச் சேர்ந்தவர்களாவார்களென்று தீர்மானிக்கப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு."

6-வது பிரிவு :

(I) குறிப்பிட்ட உட்பிரிவில் I-வது வரியிலே " சென்னபட்டணம் 1893-ம்வருஷத்துக் கிராம மேரைத் தீர்வை ஆக்ட் " என்பதற்குப் பர்த்தியாக " இந்த ஆக்ட் " என்பதையும், 10-வது வரியிலே " மேற்படி ஆக்ட் பிரயோகப்படுகிற " என்பதற்குப் பர்த்தியாக " இந்த ஆக்டைச்சேர்ந்த 3-வது பிரிவிற்கண்ட (I)

குறிப்பிட்ட பகுதியிலே விவரித்துச் சொல்லியிருக்கிற வகைகளைச் சேர்ந்த" என்பதையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

(2) குறிப்பிட்ட உட்பிரிவில், "சென்னப்பட்டணம் 1893-ம் ஹுத்துக் கிராம மேரைத் தீர்வை ஆக்ட் செலாவணியாகிற யாதொரு கிராமத்தில்" என்பதற்குப் பர்த்தியாக "யாதொரு ரயத்வாரி கிராமத்திலாவது கிராம பரிபாலன காரியத்துக்காக ஒரு ரயத்வாரி கிராமத்தோடு சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ள யாதொரு இனும் கிராமத்திலாவது" என்பதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

20-வது பிரிவு :

(ix) குறிப்பிட்ட பகுதியிலே "1893-ம் ஹுத்துச் சென்னபட்டணம் கிராம மேரை ஆக்டின்படிக்கும்" என்பதை விட்டுவிடவேண்டும்.

1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷனும் 1840-ம் வருஷத்து 8-வது ஆக்ட்டும்.

ரொக்கத்தைப்பற்றியாவது ஒருவன் தன்னோடுகூட எடுத்துக்கொண்டு போகத்தக்க சொந்த சொத்து எவ்வளவு மதிப்புள்ளதா யிருந்தாலும் அதைப்பற்றியாவது கொண்டுவரப்படும் வியாஜ்ஜியங்களைப் பரிசீலனை செய்வதற்காகத் தங்களுடைய கிராமங்களுக்குட்பட்ட கிர்ாம பஞ்சாயத்துகளைச் சேர்க்கக் கிராம முன்ஸீப்புகளுக்கு 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன்படி அதிகாரமுண்டு. விவாதம் நேரிடுவதனுல் பிடிக்கத்தக்க செலவைக் குறைக்கவேண்டுமென்பதும், முக்கியமானவர்களாயும் மிகவும் புத்திசாலிகளாயு மிருக்கிற குடித்தனக்காரர்களைக் கொண்டு அவர்களுடைய அயலாருக்கு நியாயஞ்சொல்லுவிப்பதினுலே அக்குடித்தனக்காரர்களை உபயோகமுள்ளவர்களாகவும் மதிக்கத்தக்கவர்களாகவும் செய்யவேண்டுமென்பதும் மேற்படி ரெகுலேஷன் கருத்து; இந்த விஷயம் அந்த ரெகுலேஷன் பீடிகையினுல் தெரியவரும். ஆக்டின்படி பஞ்சாயத்தாரை ஸம்மனனுப்பி வரவழைக்க முன்ஸீப்புக்குள்ள அதிகாரத்தை 2-வது பிரிவைச் சேர்ந்த மூன்றுவது உட்பிரிவிலுள்ள விலக்குக் குட்பட்டு, அந்தப் பிரிவின் இரண்டாவது உட்பிரிவில் உதகரிக்கப்பட்டிருக்கிற இரண்டு விஷயங்களுக்குமாத்திரம் உபயோகிக்கலாகுமென்பதைக் கவனித்தல் வேண்டும்.

பஞ்சாயத்தைச் சேர்க்கிறவிதம் இன்னதென்று 3-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. பஞ்சாயத்தாருக்கு அனுப்பப்பட்ட விஷயத்தை விசாரணை செய்கையில் அவர்கள் அனுசரிக்கவேண்டிய முறைமையைக் குறித்துப் பொதுவாய் ஆக்ட்டின் 4-வது பிரிவுமுதல் 7-வது பிரிவுவரையிலுள்ள பிரிவுகளில் சொல்லியிருக்கிறது; 4-வது பிரிவைச்சேர்ந்த 2-வது, 8-வது, 13-வது உட்பிரிவுகளிலும் 5-வது பிரிவிலும் சொல்லியிருக்கிற கடமைகள்தாம் முன்ஸீப்புகளுடைய கடமைகளாகும். வியாஜ்ஜியத்தைத் தீர்மானிக்கப் பஞ்சா

யத்தாருக்குள் பெரும்பான்மையாருக்கு அதிகாரமுண்டு; அந்த தீர்மானத்தைச் சட்டப்படி நியாயமானதாக்குவதற்கும் 1840-வருஷத்து 8-வது ஆக்டின்படி அவர்களுடைய கையெழுத்து அல்லது கைநாட்டு செய்வது போதுமானது; ஆயினும் பெரும்பான்மையோரால் செய்யப்பட்ட தீர்மானத்திற்குக் கையெழுத்து அல்லது கைநாட்டு செய்யச் சிறுபான்மையோருக்கு இஷ்டமிராவிட்டால் அந்தப்படி கையெழுத்து அல்லது கைநாட்டு செய்யாமைக்குத் தமக்குள்ள நியாயங்களை எழுதித் தங்களுடைய கைநாட்டு அல்லது கையெழுத்து இட்டுவைக்க அச்சிறுபான்மையோருக்குச் சுதந்தரமுண்டு. முத்திரையிட்ட லகோட்டால் டிக்ரிகளின் நகல்களை முன்ஸீப் வரப்பெற்றுக்கொள்ளும்போது 8-வது ‹ -வது பிரிவுகளில் சொல்லியிருக்கிற முறைமையை அவர் அனுசரிக்கவேண்டும். ஒருவனுக்கு நேரில் செய்யப்பட்ட தீங்குகளினிமித்தம் நஷ்டங்கட்டிக் கொடுக்கவேண்டுமென்றாவது ஒருவனுக்கு நேரில் சேரவேண்டிய எவ்வகையான நஷ்டம் வாங்கும்பொருட்டாவது கொண்டு வரப்படும் வியாஜ்ஜியங்களை 12-வது பிரிவின்படி கிராம பஞ்சாயத்தாருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்புவது கூடாதென்பதை கிராம முன்ஸீப்புகள் கவனிக்கவேண்டும். பைசல் செய்யப்பட்ட யாதொரு தொகை அல்லது ஒருவனுடைய வேறே சொந்த சொத்தின் அளவாவது அதன் பெறுமானமாவது நூறு ரூபாய்க்கு அதிகப்படாமலிருக்கும்போது கிராம பஞ்சாயத்தாருடைய டிக்ரிகளைக் கிராம முன்ஸீப்புகள் நிறைவேற்றக்கூடும்.

1816-ம்ஸாலத்து 5-வது ரெகுலேஷன்படிக்கான விதியேற்பாடுகள்.

ரெகுலேஷன் 4-வது பிரிவின் 2-குறிப்பிட்டபாகம்:—இந்த பாகத்தினால் செய்யப்படவேண்டிய உடன்படிக்கையை பஞ்சாயத்தாருக்கு முன் கொண்டுபோகாமை பஞ்சாயத்தாரால் செய்யப்படும் டிக்ரிக்கு பாதகமாகும்.

1837-ம்வருஷம் ஜனவரிமீ 27உ பிறந்த ஸதர்தாலத்.

ரெகுலேஷன் 4-வது பிரிவு:—வேறே யாதொரு நீதிவிசாரணைகர்த்தர்களுக்கு முன்எப்படியோ அப்படியே பஞ்சாயத்தாருக்கு முன்னும் யாதொரு வியாஜ்ஜியத்தில் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளலாம். உபயகக்ஷிக்கார்ரர் ஸம்மதிப்பார்களானால் பஞ்சாயத்தாருடைய தீர்மானத்திற்கு வியாஜ்ஜியம் அனுப்பலாகும்; ஆகையால் மேற்படியார்களுடைய ஸம்மதியின்படி அந்த வியாஜ்ஜியத்தை மறுபடியும் வரவழைத்துக்கொள்ளலாம்; தீர்மானத்தைஒப்புக்கொள்ளுகிறோமென்று எழுதிக்கொடுத்த முச்சிலிக்கா ரத்தாகவேண்டியது தானே.

1828-ம் வருஷம் பிப்ரவரி மீ 8உ பிறந்த ஸதர்தாலத் ஸர்க்யுலர் ஆர்டர்.

ரெகுலேஷன் 6-வதுபிரிவு:—தீர்மானம் கொடுப்பதற்குமுன்னே பஞ்சாயத்தைச்சேர்ந்த ஒருவராவது பலராவது இறந்துபோனால் அதுகாரணமாக அந்த பஞ்சாயத்து கலைந்துபோனதாகவும், முச்சிலிக்கா சட்டப்படி செலாவணியாகாததாய் விட்டதாகவும் பாவிக்கப்படவேண்டும். நூதன பஞ்சாயத்துவேண்டுமென்று கக்ஷிக்காரர்கள் விண்ணப்பஞ்செய்துகொண்டால், முந்திய பஞ்சாயத்தைச்சேர்ந்து ஜீவித்திருக்கிறவர்கள் இந்தப்பஞ்சாயத்தில் சேர அவர்களுக்குச்சுதந்தரமுண்டு. முந்தியபஞ்சாயத்தாருக்குமுன் எழுதிக்கொள்ளப்பட்

1828-ம் வருஷம் மார்ச்சு மீ 27உ பிறந்த ஸதர்தாலத் ஸர்க்யுலர் ஆர்டர்.

டவாக்குமூலங்கள் ஸரியானவைகளென்று உறுதிமொழிகூறப்பட்டிருக்குமாகில் அவைகளை உபயோகித்துக்கொள்ள நூதனபஞ்சாயத்தாருக்குச் சுதந்தரமுண்டு.

1824-ம் வருஷம் மார்ச்சு மீ 19௳ பிறந்த ஸதரதாலத் ஸர்க்யுலர் ஆர்டர்.

ரெகுலேஷன் 12-வது பிரிவு:—நஷ்டத்திற்காக கொண்டுவரப்படும் எல்லாவியாஜ்ஜியங்களும் பஞ்சாயத்தார் பிடிக்கக்கூடாதென்று நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன.

M. P. 110-ம் நம்பர் விஷயமாக 1836-ம் வருஷம் அக்டோபர்மீ 24௳ பிறந்த ஸதரதாலத்நடவடிக்கை.

ரெகுலேஷன் 12-வது பிரிவு:—கோர்ட்டாருடைய டிக்ரியின்படி கடைசியாய்த் தீர்மானிக்கப்பட்ட வியாஜ்ஜியத்தின் ஸாராம்ஸங்களைப்பற்றி விசாரணை செய்ய பஞ்சாயத்தாருக்கு எவ்வளவும்அதிகாரங் கிடையாது.

இந்தியன் லாரிபோர்ட் 7-வது வால்யும் சென்னப்பட்டணம்552-ம் பக்கம்.

ரெகுலேஷன் 17-வது பிரிவு:—ரெகுலேஷனைச்சேர்ந்த 17-வது பிரிவு பிந்திய சட்டதிட்டங்களினால் ரத்து செய்யப்படவில்லை.

1829-ம வருஷம்பிப்ரவரி மீ 18௳ பிறந்த ஸதரதாலத்நடவடிக்கை

ரெகுலேஷன் 17-வது பிரிவு:—முந்தியமாதத்தில் தீர்மானிக்கப்பட்ட வியாஜ்ஜியங்களைக்குறித்து. அடியிற்கண்ட நமூனாப்படி கிராமகர்ணம் எழுதிய ரிபோர்ட்டை கிராமமுன்ஸீப்புகள் பிரதி சவுரமாதம் முதல்தேதியில் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப்புகளுக்கு அனுப்பவேண்டும்.

மீ த்தில் கிராமத்திலே பஞ்சாயத்தாரால் தீர்மானிக்கப்பட்ட வியாஜ்ஜியங்களைப்பற்றிய ரிபோர்ட்.

நம்பர்.	கக்ஷிக்காருடைய பெயர்.	வியாஜ்ஜியங்களின் கருத்து.	தாக்கல்செய்யப்பட்ட தேதி.	டிக்ரியின் தேதியும் அதின் பொழிப்பும்.

தங்களுக்குமுன் பைசலாகாமலிருக்கிற வியாஜ்ஜியங்களைக் குறித்துக் கிராம முன்ஸீப்புகள் கர்ணத்தினால் அடியிற்கண்ட நமூனாப்படி எழுதப்படும் ரிபோர்ட்டுகளைப் பிரதிவருஷம் ஜனவரிமீ 1௳யிலும் ஜூலைமீ 1௳யிலும் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப்புக்கு அனுப்பவேண்டும்:—

ஜனவரிமீ Iஉயில் அல்லது ஜூலை மீ Iஉயில் கிராமத்திலே பஞ்சாயத்தாருக்கு முன் தீர்மானமாகாமலிருக்கிற வியாஜ்ஜியங்களைப்பற்றிய ரிபோர்ட்.

நம்பர்.	கக்ஷிக்காரருடைய பெயர்.	வியாஜ்ஜியங்களின் கருத்து.	தாக்கல் செய்யப்பட்ட தேதி.

இந்த ரிபோர்ட்டுகளை ஸர்விஸ்பேரிங்காய் ஸர்க்கார் தபால்மூலமாகவாவது ஒரு சேவகன் மூலமாகவாவது டிஸ்டிரிக்ட் முன்ஸீப்புக்கோ அல்லது அதிஸமீபத்திலுள்ள போலீஸ் உத்தியோகஸ்தருக்கோ அனுப்பிவிடவேண்டும்; அந்த போலீஸ் உத்தியோகஸ்தர் அவைகளுக்காக ரசீது கொடுத்து அவைகளை டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப்புக்கு அனுப்பிவிடவேண்டும்.

1816-ம் வருஷத்து 12-வது ரெகுலேஷன் :—(1) நிச்சயமாய் ஏற்படாததாகவாவது விவாதத்திலிருக்கிறதாகவாவதுள்ள எல்லை அல்லது நிலை அடையாளத்தைத் தீர்மானிக்கிற பக்ஷத்திலே நிலங்கள் அல்லது தானியங்களின் தாவாக்கள் செலாவணியாகத் தக்கவைகளாயிருக்குமாகில் அப்படிப்பட்ட தாவாக்களுக்கும், (2) பூஸ்திதிக்குடையவர்கள் அல்லது குத்தகைதாரர்களுக்கும் அவர்களுடைய ரயத்துகளுக்கும் நிலத்தின் அநுபோகத்தைப் பற்றியும் ஸாகுபடியைப் பற்றியும் நீர்ப்பாயச்சலைப் பற்றியும் நேரிடுகிற விவாதங்களுக்கும் ஸம்பந்தப்பட்ட சச்சரவுகளைப் பைசல்செய்து தீர்மானிப்பதற்காகக் கிராமபஞ்சாயத்தாரைச் சேர்க்கவேண்டுமென்று கிராமமுன்ஸீப்புகளுக்கு உத்தரவுசெய்யஇந்தரெகுலேஷன்படி கலெக்டர்களுக்கு அதிகாரமுண்டு. பஞ்சாயத்தாரைச்சேர்ப்பதும் பஞ்சாயத்தார் நடத்தும் நடவடிக்கைகளும் 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷனில் சொல்லப்பட்டிருக்கிற விதிகளுக்கிணங்கி இருக்கவேண்டும்.

1816-ம் வருஷம் 12-வது ரெகுலேஷன்படிக்கான விதியேற்பாடுகள்.

1856-ம் வருஷம் மே மீ 13உ பிறந்த ரெவினியு போர்டார் ஸர்க்யுலர் உத்தரவு 43-வது பக்கம்.

1837-ம்வருஷத்து 4-வது ஆக்ட்.

சுதேசிகளுக்கு எப்படியோ அப்படியே நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிற ஐரோப்பியர்களுக்கும் ரெகுலேஷன் பிரயோகப்படத்தக்கதாகும். பஞ்சாயத்தைச் சேர்ந்த எல்லாரும் ஐரோப்பியர்களாகவாவது சிலர் ஐரோப்பியர்களாகவாவதிருக்கலாம்.

1837-ம் வருஷம்ஜனவரிமீ 27உபிறந்தஸதாதாலத் நடவடிக்கை.

ரெகுலேஷன்6-வதுபிரிவு 1-வது உட்பிரிவு:—கிராமபஞ்சாயத்தாருடைய அபிப்பிராயத்திற்கு யாதொரு கேஸ் அனுப்பப்படுவதன்மேல், இந்த உட்பிரிவின் நிபந்தனைகளின்படி அந்தபஞ்சாயத்தைச் சேர்க்கவேண்டுமென்றும், 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன்படி நடவடிக்கை நடத்தவேண்டுமென்று இந்த உட்பிரிவில் கண்டிருக்கிறது.

இந்த ரெகுலேஷன்படி அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலே 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷன் 4-வது பிரிவைச் சேர்ந்த 2-வது உட்பிரிவின்ரடி கிராம பஞ்சாயத்தாருக்கு முன் எழுத்து மூலமான உடன்படிக்கையைக்கொண்டுபோகாமலிருப்பதுடிக்ரிக்குப்பாதகமாகும்.

1828-ம் வருஷம் பிபரவரி மீ 28உ பிறந்த ஸதரதாலத் ஸர்க்யுலர் ஆர்டர்.

பஞ்சாயத்தாருக்குமுன் ராஜீநாமாதாக்கல் செய்யக் கக்ஷிக்காரர்களுக்குச் சுதந்தரமுண்டு. பஞ்சாயத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துபோகிற விஷயத்திலே அதுகாரணமாக அந்தபஞ்சாயத்து கலைந்துபோகிறது.

விவசாய அபிவிர்த்தி.

விவசாய விஷயத்துக்கடுத்த ஒழுங்குகளை விருத்திக்கு கொண்டுவரும் விஷயத்தில் ஐரோப்பிய சாஸ்திரத்தினால் அறிந்துகொள்ள வேண்டிய தொன்றுமில்லையென்று இந்தியதேசத்தின் பயிர்செய்யுங் குடிகள் இதுவரை கொண்டிருந்த அபிப்பிராயம் இப்பொழுது விலகியிருக்கும் அல்லது சீக்கிரம் விலகிப்போகவேண்டும். நிலத்தை சாகுபடி செய்வதிலும் அதின் பல உட்பிரிவுகளிலும் பெரிய குடித்தனக்காரர்கள் இதுவரை செலுத்திவந்த கவனத்தைவிட அதிக கவனத்தைச் செலுத்தவேண்டிய தவசியமாயிருக்கிறது. நிலத்தீர்வையானது நியாயமாய் விதிகக்கூடியதைக்காட்டிலு மதிகமாயிருக்கிறதென்ற முறை சாதாரணமா யிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றி தீர்க்கமாய் விசாரிக்காமல் வாஸ்தவியமாகவே நிலத்தீர்வையானது அவ்வளவு அதிகமாயிருக்கும் பட்சத்தில் அதற்குச்சரியான பரிகாரமானது இப்பொழுது நடந்துவருவதைக்காட்டிலும் பூமி சாகுபடியை அதிக சுருசுருப்பாய நடத்துவதேயாம்.

பலவிதமான பூமிகளுக்குத் தக்க எருக்கள் இன்னதென்று ஐரோப்பிய சாஸ்திரத்தினால் குடியானவர்கள் தெரிந்துக்கொள்ளக்கூடும். பயிர்களுக்கு நேரிடும் பலவித நோய்களை நாசப்படுத்தவும் நல்ல விதிகளைத் தெரிந்தெடுக்கவும் ஷை சாஸ்திரம் கற்பிக்கும். மேலும் உபயோகமற்ற விதிகளை நீக்கி உபயோகமுள்ளவைகளைத் தெரிந்தெடுப்பதற்குள்ள காரணங்களை விவரித்துக் காட்டும். ஆனால் குடியானவர்கள் தங்களுக்குள்ள அவகாசங்களை செம்மையாய் உபயோகப்படுத்திக்கொள்ளும் விஷயம் இன்னதென்று ஷை சாஸ்திரம் கற்பிக்கமாட்டாது. அப்படிப்பட்ட அவகாசங்களைமாத்திரம் அது குறிக்கக் கூடும். ஆதலால் பெரிய குடித்தனக்காரர்கள் தாங்கள் தெரிந்துகொண்டிருக்கும் விஷயத்தைத் தகுந்தபடி உபயோகப்படுத்தி தங்களிட ஊக்கத்தையும் சமயோசிதமான செய்கையையும எளிய குடித்தனக்காரர்கள் பார்த்து நடந்துகொள்ளும்படியாக விவசாய சங்கத்தார் பெரிய குடித்தனக்காரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள், மாகூலுற்பத்தி யதிகரிக்க யின்னது செய்ய வேண்டுமென்பதை தங்களிட அனுபவத்தால் காட்டவேண்டியது பெரிய குடித்தனக்காரர்களைச் சார்ந்ததா யிருக்கின்றது. சற்று அதிக ஜாக்கிரதையுடனும் விசேஷமாய் சற்று அதிக முயற்சியுடனும் மாகூல் உற்பத்தியை இருமடங்காக்கக் கூடுமென்பதில சந்தேகமில்லை. இந்த காலத்தில் சுதேசியம் என்னும் சொல்லைப்பற்றி அதிகமாய் கேள்விப்படுகிறோம். ஆனால் அந்த சொல் வாஸ்தவியத்தில் குறிக்கும்படியான யாதொன்றையும் நாம் பார்ப்பது அரிதாயிருக்கிறது. சுருக்கிச்சொல்லில், ஒரு தேசத்தார்கள் பரதேசங்களின்

உற்பத்திப்பொருள்களை யெதிர்பாராமல் தங்கள் தேசத்திலேயே வேண்டியவைகளை உற்பத்தி செய்துகொள்ளுவதே சுதேசியம் என்னும் சொல்லின் அர்த்தமாகும். இந்தியாவில் ஜனங்களிட ஸம்ரக்ஷணைக்குப் போதுமான அளவை மீறி அதிகமான மீதியிருக்கும்படியானதாக பூமியிலிருந்து வரும்படி வந்தாலொழிய பரதேசங்களின் உற்பத்திப்பொருள்களை யபேக்ஷியாமலிருக்க முடியாதென்பது நிச்சயமா யிருக்கிறது. ஆகையால் பூமியை எவ்வாறு உபயோகப்படுத்தினால் நல்ல பயனுண்டாகுமோ அவ்வாறு உபயோகப்படுத்தி அதில் மறைந்திருக்கும்படியான ஸகல பொருளையும் அடையும்படியாகச் செய்துகொள்ளவேண்டும். தம்முடைய காலத்தையும், ஸாமர்த்தியத்தையும், ஊக்கத்தையும் மேற்கண்ட விஷயத்தி லுபயோகப்படுத்துகிறவர்தான் உண்மையான சுதேசாபிமானியாவர்.

இந்த உபாயத்தின்படி எல்லோரும் நடந்துகொள்ளும்படியாக கோயமுத்தூர் ஜில்லாவின் குடித்தனக்காரர்கள் வழிகாட்டவேண்டுமென்று இந்த விவசாய சங்கத்தார் ஆவலுடன் கோருகிறதுமல்லாமல் அவர்கள் இவ்விஷயத்தை பயபக்தியுடன் மனதிற்கொண்டு முன்னதாக அனுபவத்துக்குக் கொண்டுவர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது. வேண்டியமட்டும் இவ்விஷயத்தைப்பற்றி பேசியாயிற்று. தேவையானதைச் செய்யவேண்டிய காலம் வந்திருக்கின்றது. தக்கவிதமான சாகுபடி யின்னதென்று பிறர் தெரிந்துகொள்ளும்படியாக பெரிய குடித்தனக்காரர்கள் தங்களிட பூமிகளில் சில ஏகராக்களைப் பிரத்தியேகப்படுத்தவேண்டும். மிஸ்டர் அருளானந்தம் பிள்ளை தாராபுரத்தில் உபாயமாய்ச் செய்திருப்பதைப்போல் அதிகமாய் சாகுபடி வேலையை நடத்தி தங்களிட விடாமுயற்சியையும் தாங்கள் வெற்றியடைவதையும் பார்த்து மாமூல் வழக்கங்களையும் நடவடிக்கைகளையும் அனுசரித்து வருகிறவர்கள் சிரேஷ்டமான மார்க்கத்தை யனுசரிக்கும்படி நடந்துக்கொள்ள வேண்டும்.

அடியிற்கண்ட குறிப்புகளும் பிரபோதங்களும் குடியானவர்களுக் குபயோகமுள்ளவைகளா யிருக்குமென்று விவசாய சங்கத்தார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

1. சப்பாத்துக்கள்ளி வேலிகளை வேரோடு பிடுங்கி யெறிந்து அவைகளுக்குப் பதிலாக முள்வேலிகளை நடவேண்டும். இவைகள் பூமிகளிலும் இட்டேரிகளிலும் பாவமாட்டாது. ஜனங்களுக்கு இடைஞ்சலையும் அபாயத்தையும் உண்டாக்கமாட்டாது. இந்த வேலிகளிலிருந்து வெட்டப்பட்டவைகள் வெள்ளாடுகளுக்குத் தீவனமாகவும் அடுப்பெரிக்க விறகாகவும் உபயோகப்படும். இந்த வேலிகளை பிரதி வருஷமும் கத்தரித்து வருவதில் 5 அடி யுயரத்துக் கதிகமாய் வளராமலிருக்கும்படி செய்தால் அவைகள் அதிக அடர்த்தியாயும் உறுதியாகவுமிருக்கும்.

2. பூமிகளைச் சுற்றி மரங்களை வைத்து விருத்திசெய்வதில் குடிகள் சிரத்தை யெடுத்துக்கொள்வார்களேயாகில் மரத்துக்குச் சமீபத்திலுள்ள பூமியில் பயிர் நன்றாய் வளராமல் சொல்ப நஷ்டம் நேரிட்டாலும் மரத்தின் பலனைக்கொண்டு அதை போதுமானமட்டும் நிவர்த்தி செய்துகொள்ளலாம்.

3. இப்போதுண்டாவதைவிட குறைவான சேதமும் அதிக உபயோகமுள்ளதுமான விதைப்பை யனுசரிக்கவேண்டும். விதைப்பதற்குத் தகுதியான கருவிகள் நயமான விலைக்ககப்படுகின்றன. மாதிரிக் கருவியை எந்த

கிராமத் தச்சனுக்கும் காண்பிவித்து வேறு கருவிகள் செய்துகொள்ளக்கூடும்.

4. முதல் முதலில் பக்குவத்துக்கு வரும் தானியத்தைத் தெரிந்தெடுத்து அதை விதை தானியமாக வுபயோகிக்க வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிச்செய்தால் மாசூல் அதிசீக்கிரத்தில் கிடைக்கலாம்.

5. தோட்ட பூமிகளில் புதுமாதிரியான சோளப்பயிர்களைப் பரீட்சார்த்தமாய் சாகுபடி செய்யவேண்டும். இதுவிஷயத்தில் இன்னது செய்யவேண்டுமென்பது தாராபுரத்தில் நடத்திய பரீட்சார்த்த சாகுபடியினால் வெளியாகின்றது.

உழவு.

நம்முடைய ஆகாரத்தை நாம் வாயின் வழியாய் சாப்பிடுகிறோம். நிலத்தில் விளைந்த நெல், கோதுமை, கேழ்வாகு, சோளம் முதலிய தானியங்களை உலர்த்திக் குத்தித் தீட்டித் தண்ணீரில் கழுவி வேகவைத்துச் சாதமாகவும் ரொட்டி தோசை முதலிய பலகாரங்களாகவும் செய்து நாம் சாப்பிடுகிறோம். சாப்பிடும்போது இவ்வுணவானது தீனிப்பையில் எளிதில் ஜீரணமாகி நரம்புகள் வழியாய்ச் சென்று இரத்தமாக மாறுவதற்கு அனுகூலமாக உணவை நாம் பற்களால் மென்று அரைத்து உட்கொள்ளுகிறோம். குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட உணவு ஜீரணமாகாது. பால் அவர்களுக்கு முக்கிய உணவாயிருக்கிறது. இப்படி ஜலரூபமாயிருந்தாலன்றிக் குழந்தைகளுக்கு ஆகாரம் உட்கொள்ள முடியாது. ஜீவராசிகளின் தன்மை இப்படியிருக்க பயிர் செடி கொடிகளாகிய ஸ்தாவாரங்களின் தன்மை எப்படியென்று கவனிப்போம்.

நமது ஜீவிப்புக்கு ஆகாரம் எப்படி அவசியமோ அப்படியே பயிர்களுக்கும் ஆகாரம் அவசியம். நாம் ஆகாரத்தைச் சாப்பிடுவதால் நம்முடைய சரீரம் வளருகிறதைப்போலவே, பயிர்களின் வளர்ச்சிக்கும் ஆகாரம் தேவையாயிருக்கிறது. ஆனாலும் ஜீவராசிகளுக்கும் பயிர் வகைகளுக்கும் உணவு உட்கொள்ளும் விஷயத்தில் இருக்கும் வித்தியாசமென்னவென்றால், பயிர்களுக்குக் கை வாய் பல் முதலிய அவயவங்கள் இல்லை. அவைகளுக்குப் பதிலாக வேர்களிருக்கின்றன. பயிர்வகைகள் தங்கள் வேர்களின் நுனியில் எத்தனையோ வாய்களை யுடையனவாயிருக்கின்றன. அவை வெகு நுட்பமாயிருக்கும். அந்த நுட்பமான வாய்களின் மூலியமாய பயிர்வகைகள் தங்கள் ஆகாரத்தை உட்கொள்ளும். குழந்தைகளைப்போலவே பயிர் வகைகள் ஜலரூபமான ஆகாரத்தையே உட்கொள்ளக்கூடிய சக்தியுடையன. ஜலரூபமாயில்லாத மற்ற ஆகாரம் நுனிவேர்களிலிருக்கும் அதி நுட்பமான வாய்களில் நுழையாது. பயிர்களுக்கு ஆகாரத்தை மென்று அரைத்துக்கரைக்கும் சக்தியில்லை.

நமக்கு பயிர்களால் விளைவிக்கப்பட்ட நெல் கோதுமை முதலிய தானியங்கள் ஆகாரமாகும். பயிர்களுக்கு ஆகாரம் முக்கியமாய் மண்ணிலிருந்துண்டாகும் பூமிசாரம். குப்பை, எரு, சாணி முதலியனவும் அவைகளுக்கு உணவாகும்.

இந்த மண் எரு, சாணி முதலியன பயிர்களுக்கு ஆகாரமாக உபயோகமாக வேண்டுமானால், அரிசி கோதுமை முதலியவைகள் வெந்து பக்குவப்படுவதுபோலவே பயிருணவும் பக்குவப்படவேண்டும். ஆனால் பயிருணவு பக்குவப்படுவதற்கு நெருப்பின் உஷ்ணம் அவசியமில்லை. சூரிய ஒளியும் உஷ்ண

முமே போதும். கட்டியாய் உறைந்திருக்கும் மண்ணை இடித்துப் பொடியாக்கி வெயிலில் உலர்த்திக் கிண்டிக்கிளறித் தண்ணீரில் கரைத்தால் அதின் சாரம் செடிகளுக்கு உணவாய் உபயோகப்படும். இப்படி நாம் செய்யும் காரியமானது பயிர்களின் உணவைப் பக்குவப்படுத்துவதென்று சொல்லலாம். இதை இந்நாட்டிலே பருவஞ் செய்வதென்று சொல்லிக்கொள்வார்கள்.

ஆகவே விவசாயத்தில் நாம் முதல் முதல் செய்யவேண்டிய காரியமாவது மண்ணைப் பெயர்த்துக் கிளறித் தூளாக்கி, அதைச் சூரிய வெப்பத்திலும் ஒளியிலும் உலரவிடுவதுதான்.

இந்தக் காரியத்தை எளிதாயும் கூடியமட்டும் குறைந்த செலவிலும் நடத்துவதற்காக ஏர் உழவை ஆதிகாலத்திலேயே கண்டுபிடித்திருக்கிறார்கள். பூமியில் மழைபெய்து அல்லது தண்ணீர்பாய்ச்சிப் பருவம் வந்தவுடன் ஏர் பூட்டி உழுகிறோம். அதனால் கட்டியாயிருந்த மண் உடைந்து பொடியாகி புரண்டு சூரியவெப்பம் அதில் தாக்குகிறது. அப்படி சூரிய வொளிபடுவதால் மண்ணிலுள்ள வஸ்துக்களில் துருப்பிடித்ததுபோல் மாறுதலுண்டாகி மண் நெகிழ்ச்சியடைகிறது. அப்படிநெகிழ்ந்த மண்ணை மாறி மாறி யுழும்போது அது அதிக தூளாகித் தண்ணீரில் கரையக்கூடிய விதமாய் மாறிவிடுகிறது. இதுவே உழவின் முதற்பயன்.

உறைந்த நிலத்தில் பயிர்களின் வேர்கள் செல்வது கடினம். ஆகையால் நிலமானது வேர்கள் எவ்வளவு தூரம் சென்று உணவை சேகரிக்கவேண்டுமோ அவ்வளவு ஆழத்துக்கு நெகிழ்ச்சி யடைந்திருக்க வேண்டியது அவசியம். இது உழவின் மற்றொரு பயன். மேலும் உறைந்த தரையில் விழுந்த மழைத்தண்ணீர் அங்கே தங்காமல் வெளியே போய்விடும். அப்படிப் போகாமல் தடுத்து அதைப் பயிர்களுக்கு உபயோகப்படுத்துவதற்காக நிலம் முன்னமே உழவாகி நெகிழ்ச்சி யடைந்திருக்கவேணடும். மேலும் நிலத்தில் இறங்கிய தண்ணீரானது சூரியவெப்பத்தால் எளிதில் ஆவியாய் போய்விடாமல் காப்பதற்கும் உழவு அவசியம். விதைக்கப்படும் விதைகள் மண்ணுக்குள் புதைவதற்கும், நடும் நாற்று வேரூன்றி நிற்பதற்கும் உழவு அவசியம். புல்பூண்டு முதலியகளையை வேரோடே களைவதற்கும் உழவு அவசியம். இப்படி அனேக விதமாய்ப்பயன்படத்தக்க உழவு இந்தத் தேசத்தில் எப்படி நடத்தப்படுகிறதென்பதையும், அதை எவ்விதமாய்ச் சீர்திருத்தி அபிவிர்த்தி செய்யக்கூடுமென்பதையும் சற்று கவனிப்போம்:—

நாட்டுக்கலப்பை யொன்று செய்யச்செல்லும் செலவு ரூ. 1—8—0 ஆகிறது. அதை இழுக்கச் சுமார் ரூ. 35 விலையுள்ள இரண்டு கால்நடைகள் போதும். இந்நாட்டுக் கலப்பையால் உழும்போது அது மண்ணில் சுமார் 3 அங்குலம் ஆழத்துக்குத் தான் கீறிக்கொண்டுபோகும். அதிற்பெரும் மண்ணும் கொஞ்சந்தான். நெருக்கமாய் உழுதாலுங்கூட "இடை கட்டை" யென்று நாம் சாதாரணமாய்ச்சொல்லும் உறைந்த மண் போகாமல் இடையிடையே நின்றுபோம். ஆகவே நாட்டுக்கலப்பையால் உழும்போது ஒவ்வொரு சாலிலும் உழவான இடமானது மேலே 4 அங்குல அகலமும் கீழே 1 அங்குல அகலமும், 3 அங்குல ஆழமும் உள்ள V முக்கோணவடிவாயிருக்கிறது. ஒரு சாலுக்கும் மற்றொருசாலுக்கும் இடையே மேலே ஒரு அங்குல அகலமும், கீழே மூன்றங்குலமும் உள்ள V முக்கோணவடிவான இடைக்கட்டை யொன்றிருக்கும்.

இப்படி இடையிடையே இருக்கும்கட்டையற்றுப் புழுதி அல்லது தொளியாவதற்கு குறைந்தது நான்குதரம் மாறி மாறி உழவேண்டியதாகிறது. ஒரு ஏக்கர் நிலம் 43560 சதுரஅடியுள்ளது. ஒரு சால் 4 அங்குல அகலமும் இருப்பதால் ஒரு ஏக்கர் உழுவதற்கு உழவு மாடுகள் சற்றேறக்குறைய 25 மைல் தூரம் நடக்கவேண்டியிருக்கிறது. நாலு உழவுக்கும் 100 மைல் தூரம் கால் நடைகள் நடக்கின்றன. உழவுதொழில் ஏதோ எளிதாக நடந்துபோகிறதா, அநேகர் எண்ணலாம். இந்த விஷயத்தைப்பற்றி ஊன்றியோசித்தால் இதில் விவரிக்கும் விஷயம் உண்மையென்பது தெளிவாய் வெளியாகும். மேற்சொன்னபடி 100 மைல் நடப்பதற்கு நாளொன்றுக்கு சுமார் 14 மைல் வீதம் குறைந்தது 7 நாள் செல்லும்.

இதற்கு ஏற்படும் செலவு.

	ரூ.	அ.	பை.
ஒரு ஜோடு கால் நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 6 அணா வீதம் 7 நாளைக்கு	2	10	0
உழவனுக்கு நாளொன்றுக்கு 3 அணா வீதம் 7 நாளைக்குக்கூலி	1	5	0
கலப்பை தேய்வு	0	1	0
ஆக ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு தரம் உழுவ அதற்கு ஏற்படும் மொத்தச்செலவு	4	0	0

இது சாதாரணமாய் எற்படக்கூடிய செலவு. ஆனால் சிலர் ஒரு ஏக்கர் நிலத்தை ஒருதரம் உழுவதற்கு இப்போது ரூ. 1—8—0 தான் செலவாகிறது என்று சொல்லலாம். இது வாஸ்தவமே. ஆனால் அப்படி பணஏர்க்காரர் உழும் உழவை நமது நண்பர்கள் கவனிப்பார்களானால் கிட்டத்தட்ட ஒரு அடிக்கு ஒரு சால் ஓட்டியிருப்பதைக் காணலாம். நாம் அப்படி உழவு நடத்துவதைப்பற்றிப் பேசவில்லை. ஒரு சாலுக்கும் மற்றொரு சாலுக்கும் இடையே ஒரு அங்குலக்கட்டைகூட இல்லாமல் உழவு நடத்துவதற்கு ஏற்படும் செலவைத்தான் தீர்மானிக்கிறோம். இப்படி ரூ 4 செலவு செய்துங்கூட மூன்று அங்குல ஆழத்துக்குத்தான் மண் பேர்க்கப்படுகிறது.

நாம் முன் சொன்னபடி உழவின் முக்கியப் பயனானது மண்ணைப் பேர்த்து உடைத்துப் பொடித்து மேல்மண் கீழ்மண்ணாகவும், கீழ்மண் மேல்மண்ணாகவும் புரட்டி, சூரிய ஒளிக்கும் காற்றோட்டத்துக்கும் இலக்காக்கி, பச்சை மண்ணாயிருந்ததை வெந்த மண்ணாக்கி நெகிழ்வித்து அதிநுட்பத்தூள்களாக்கித் தண்ணீரில் சருக்கரை கரைவதுபோல் கரையக்கூடியதாய்ச்செய்வது தான். நாட்டுக்கலப்பையால் உழுவதால் மண் உடைந்து தூளாவதேயொழிய, அதில் எல்லாபாகங்களும் சூரிய ஒளிக்கும் காற்றோட்டத்துக்கும் இலக்காவதில்லை. அதனால் மண்ணின் மேற்புரத்திலிருக்கும் கொஞ்சப்பாகம் மாத்திரமே ஒருவாறு சூரியஒளியினாலும் காற்றோட்டத்தினாலும் வெந்து பக்குவமாகி பயிருணவாக மாறுகிறது; அம்மட்டோ, பயிரின்வேர்கள் 3 அங்குல ஆழத்துக்குக்கீழ இறங்குவதற்கும் இடமில்லை. ஆகையால் அந்தப்பயிரினால் நாம் அடையும் பலனும் குறைவாகிறது.

இப்படி நமக்கு நேரிடும் கேடுகளை நிவர்த்திப்பதற்காக சைதாப்பேட்டை சர்க்கார்பண்ணையை வெகுகாலம் மேற்பார்த்துவந்த மிஸ்டர் இராபர்ட்ஸன்

துரையவர்கள் அதிகப் பிரயாசப்பட்டு நமது நாட்டுக்கு ஏற்றவிதமாகவும் நமது உழவர்கள் எளிதில் கையாடக்கூடியதுமான நூதன நாட்டுக் கலப்பை ஒன்றைக் கண்டுபிடித்து அதை அநேக ஜில்லாக்களுக்கு அனுப்பினார்கள் என்றாலும் அதைப்பற்றி எல்லா விவசாயிகளுக்கும் நன்றாய்த் தெரியாது. நன்றாய்த் தெரிந்தால் இதுவரை நமது நாட்டுக்கலப்பை இருந்த இடம் கூடத்தெரியாமல் முன்னமே பறந்துபோயிருக்கும். இந்த நூதனக் கலப்பையின் சிலாக்கியங்களைக் கவனிப்போம். நம் நாட்டுக்கலப்பைபோலவே அதற்கும் ஏர்க்காலும் மேழியும் மரத்தினால் போடப்பட்டிருக்கிறது. ஆனால் கலப்பைக் குத்தி இரும்பித்தகட்டினால் செய்யப்பட்டிருக்கிறது. பலமான அகன்று நீண்ட கொழுவும், அதற்குமேல் இரும்பு மண் பலகை ஒன்றும் சேர்த்திருக்கிறது. கொழுவானது மண்ணுக்குள் புகுந்து பேர்க்கவும், மண் பலகையானது பேர்த்த மண்ணைப் புரட்டி பக்கத்தில் தள்ளவும் உபயோகமாகின்றன. நம் நாட்டுக்கலப்பைக்கும் இந்த விசேஷக் கலப்பைக்கும் இருக்கும் முக்கியவித்தியாசம் இதுவே.

நமது நாட்டுக் கலப்பை மண்ணைப் பேர்த்து அப்படியே போட்டுவிடுகிறது. இந்த கலப்பை மண்ணை ஆழமாகப் பேர்த்துப் புரட்டிவிடுகிறது. இதனால் கீழ்மண் மேல் மண்ணாகவும் மேல்மண் கீழ்மண்ணாகவும் திரிந்து பண்பட்டு அதிகப் பயிருணவை உண்டாக்குகிறதற்கு இடமுண்டாகிறது. ஒரு பானையில் அரிசிபோட்டு வேகவைக்கும்போது அடிக்கடி அதை அகப்பையால் கிளருகிறார்களல்லவா? அப்படிச் செய்யாவிட்டால் அடியிலிருக்கும் அரிசி வெந்தும் மேலிருக்கும் அரிசி வேகாமலும் சாதம் கெட்டுப்போகிறதல்லவா? அதேவிதமாக மண்ணைப் புரட்டவில்லையானால் மேலேயிருக்கும் மண் வெந்தும் அடியிலிருக்கும் மண் வேகாமலும் நின்றுபோம். அதனால் மேலிருக்கும் மண்ணில்தான் சாரமான பயிருணவு பயிர்களுக்குக் கிடைக்கும். ஆகையால் அடிக்கடி மண்ணைப் புரட்டி சூரிய ஒளிக்கும் காற்றோட்டத்துக்கும் இலக்காய்ச் செய்யவேண்டியது அத்தியாவசியம். இப்படி செய்வதற்கு இந்தச் கலப்பை நன்றாய் உதவுகிறது. மேலும் இதைக்கொண்டு நமக்கு எவ்வளவு ஆழத்துக்கு உழவேண்டுமென்றாலும் அவ்வளவு ஆழத்துக்கு உழவு நடத்தலாம். நாட்டுக் கலப்பையோ மூன்று அங்குல ஆழத்துக்கு அதிகமாக உழாது. இந்தக்கலப்பை ஐந்து அல்லது ஆறு அங்குல ஆழத்துக்கு உழவுசெய்யும். இதைக்கொண்டு ஒருதரம் உழுவதாலேயே அறுவடையான தாள்களும் களைப்புலலும் வேருடன் அற்றுப்புரண்டு மட்கி பயிருக்கு உரமாகும். மேலும் ஆறு அங்குல அகலத்துக்கும் உழலாம். அப்படி உழுவதிலும் மேலும் கீழும் ஒரே அகலமான படைச்சாலுண்டாகும். "இடை கட்டை" யென்பதே இல்லாமல் அற்றுப்போம். முதற்படைச்சால் பள்ளமாக இருக்கும். அடுத்த படைச்சால் உழும்போது முதற் படைச்சாலில் மண் விழுந்து மூடிக்கொள்ளும். மூன்றாவது படைச்சால் உழும்போது இரண்டாவது சால் மண்ணினால் மூடப்படும். இவ்விதமாக ஒரு சாலுக்கும் மற்றொரு சாலுக்கும் இடையே ஒரு அங்குல இடைகட்டை கூட இல்லாமல் உழவு நடத்தலாம்.

இந்தக் கலப்பையால் ஒரு ஏக்கர் நிலத்தை ஒருதரம் உழுவதற்கு ஏற்படும் செலவைக் கவனிப்போம். ஆறு அங்குல அகலத்துக்கு உழுவதால் ஒரு ஏக்கர் நிலத்தை உழுவதற்குக்கால்நடைகள் சுமார் 17 மைல் தூரம் நடக்க வேண்டும். இந்தக்கலப்பை உழும்போது கால் நடைகள் நாள் ஒன்றுக்கு குறைந்த பக்ஷம் சுமார் 8 அல்லது 9 மைல் நடக்கக்கூடும். ஆகவே ஒரு ஏக்கர்

நிலத்தை இந்தக் கலப்பையைகொண்டு ஒருதாம் சரியாய் உழுவதற்கு இரண்டு நாள் செல்லும். அதற்கு ஏற்படும் செலவு:

	ரூ.	அ.	பை.
நாள் ஒன்றுக்கு 2 ஜோடு கால் நடைகளுக்கு ரூ. 0—8—0 வீதம் 2 நாளைக்கு	1	0	0
உழுவனுக்கு நாள் ஒன்றுக்கு 4 அணா வீதம் இரண்டு நாளைக்கு	0	8	0
கலப்பைத் தேய்வு	0	0	6
மொத்தம் ..	1	8	6

இந்தப் புதுக்கலப்பையால் 1 ஏக்கரை 1 தாம் உழுவதில் நமக்கு குறைந்தது இரண்டரை ரூபாய் இலாபமுண்டாகிறது. அநேகம் ஏக்கர் நிலங்கள் வைத்திருப்பவர்கட்கு இலாபம் அதிகமுண்டாகுமென்று நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. மேலும் பட்டத்தில் மழைபெய்து விதைப்புக்குப் பருவமுண்டாகும் காலங்களில் ஒரு ஜோடு கால் நடைகளால் 7 நாளில் நடத்தக்கூடிய வேலையை இந்தக் கலப்பையால் இரண்டுநாளில் முடிக்கலாம். இதனால் வியவசாயிகளுக்கு எவ்வளவு அநுகூலமிருக்கிறது என்பதை எல்லோரும் நன்றாய்க் கவனிக்கவேண்டும். மேலும் சாதாரணமாய் 4 அங்குலம் முதல் 6 அங்குல ஆழத்துக்கு உழவு செய்யலாம். இதன் பிரயோஜனமும் அதிகம். நாட்டுக்கலப்பையின் கொழு இரண்டு வாரத்துக்கு ஒருதாம் சற்று தேய்ந்து போகிறதாகையால் அதை அடிக்கடி பழுது பார்க்கவேண்டியதாகின்றது. இந்தக் கலப்பையின் கொழுமுனையானது உருக்கினால் செய்யப்பட்டிருப்பதால் அதுதேய இரண்டு வருஷமாகும். அப்பால் ஒரு ஆணியைக் கழற்றிவேறு கொழுவை மாட்டிக்கொள்ளலாம்.

சிலர் இந்தக்கலப்பையைப் பார்த்தவுடனேயே "இதை இழுக்கக் குதிரை வேண்டும்," "நம்முடைய கால் நடைகள் இதை இழுத்தால் செத்துப்போம்" என்று யோசனையின்றிப் பேசுவார்கள். அவர்கள் அப்படி வீண்வார்த்தை பேசாமல் சிரத்தையுடன் தங்கள் கால் நடைகளைப் பூட்டி உழுதுபார்ப்பார்களானால்அப்போதுசாதாரணமாய் ரூ. 40 அல்லது ரூ. 50 பெறுமான 1 ஜோடு கால் நடைகள் இந்தக் கலப்பையை இழுககும் என்பதைத் தெரிந்துகொள்வார்கள்.

இந்தக் கலப்பை நமது ஜில்லா விவசாய சங்கத்தாரால் செய்யப்படுகின்றது. கலப்பையொன்றுக்கு விலை ரூ. 6-0-0 ஆகின்றது. நாட்டுக்கலப்பையை விட 4 மடங்கு விலையுள்ளதானாலும், அதைப் பார்க்கிலும் நாலுமடங்கு அதிக வேலைசெய்யக் கூடியதாகையால் இந்தப் புதுக்கலப்பையையே எல்லா விவசாயிகளும் உபயோகித்து அதன்பயனை அடையவேண்டுமென்பதுவே நம்முடைய கருத்து.

பூச்சிகளையழிக்கும் மருந்துகளினால் தெள்ளுப்பூச்சிகளையழிப்பது.

(முக்கியமாய் ப்ளேக் என்னும் மஹாமாரியின் கொடுமையைத்தடுக்கும் நோக்கத்துடன் செய்வது.)

தெள்ளுபூச்சிகள் வீடுகளிலும் மற்றக் கட்டிடங்களிலும் இரண்டு நிலைமையில் காணப்படுகின்றன. அதாவது, பூரண வளர்ச்சியடையாத இளங்கிருமி

ரூபமாகவும், பூரண வளர்ச்சியடைந்த பூச்சிரூபமாகவும் காணப்படுகின்றன. முதலில்சொன்ன நிலைமையில், அவை தரையின்மேலுள்ள தூசியிலும் அழுக்கிலும் சந்துபொந்துகளிலும் இருக்கும்; பின்சொன்ன நிலையில், அவை சூடான இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் பிராணியின்மேலிறங்கி அதன் இரத்தத்தை உறிஞ்சிக்கொண்டாவது, அவ்வித பிராணி எதுவும் கிடைக்காவிட்டால், கட்டிடத்தின் யாதொரு பாகத்தில் மறைந்துகொண்டாவது இருக்கும்.

தெள்ளுப்பூச்சியானது - நாய் அல்லது எலியைப்போன்ற சூடான இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் பிராணிகளின்மேல் தங்கி, (அவைகளின் இரத்தத்தை உறிஞ்சி)ஜீவிப்பதுந்தவிர, அது பூரணவளர்ச்சியடையாத இளங்கிருமியாகவாகிலும் யதேச்சையாய்த் திரியும் பூச்சியாகவாகிலும் காணப்படும்; இந்தப்பூச்சியானது எந்தப் பிராணியின்மேல்தங்கி ஜீ‍த்துவந்ததோ அந்தப்பிராணியைவிட்டு நீங்கினபிறகுதான் அல்லது அந்தப்பிராணி செத்தப்பிறகுதான், அது யதேச்சையாய்த்திரியும் பூச்சியாகக் காணப்படும். இந்த சமயங்களில், ஷெ கிருமி அல்லது பூச்சியானது-தான் இரத்தங்குடிக்கும் பிராணி நடமாடக்கூடிய இடங்களிலே தூசியிலும் அழுக்கிலும் மறைந்துகிடக்கும்; அது இரத்தங்குடித்து ஜீவிக்கிறது வழக்கமாயிருந்தபோதிலும், வெகுகாலம் பட்டினியாயிருந்தும் சாகாமல், மறுபடியும் ஏதாவது பிராணி கிடைக்கிறவரையிலே தன்னுடைய மறைவிடத்தில் அதிககாலம் காத்துக்கொண்டிருக்கும். ஆகையால், தெள்ளுப்பூச்சிகளை யழிக்கையிலே, இந்த விஷயங்களை ஞாபகத்தில வைத்திருப்பது அவசியமாகும்; மஹாமாரியால் எலி சாவதைப்போல, தான் இரத்தங்குடித்துவந்த பிராணி சாகிறபட்சத்தில் தெள்ளுப்பூச்சியானது யதேச்சையாய்த் திரிந்துகொண்டு, (தான் இரத்தங் குடிப்பதற்காக) புதிதாய் ஏதாவது பிராணி கிடைக்குமாவென்று பார்த்துக்கொண்டிருக்கும்.

பூரண வளர்ச்சியடைந்த தெள்ளுப்பூச்சி ஆகாரத்தை உறிஞ்சிக்குடிக்கிறது; ஆகையால், அதன் ஆகாரம் திரவரூபமாயிக்கும். இரைப்பையைப் பாதிக்கும் தன்மையுள்ள பாஷாணம் போன்ற விஷங்களைத் திரவரூபமாயுள்ள அதன் ஆகாரத்தில் கலந்துவைத்தாலன்றி மற்றப்படி, அந்த விஷங்கள் அதைப்பாதிக்கவேமாட்டா; ஆனல், மேலேகண்டபடி ஆகாரத்தில் விஷங்கலப்பது அசாத்தியமான காரியமாகையால், ஆகாரத்தை உறிஞ்சிக்குடிக்கும் பூச்சி ஜாதிகளை யழிப்பதற்குச் செய்வதைப்போலவே, "(Contact poison) ஸ்பரிசவிஷத்தை" உபயோகிப்பது அவசியமாயிருக்கிறது: "ஸ்பரிச விஷம்" என்பது சருமத்தின்மேல் படும்போது பூச்சியைக் கொள்ளகூடிய விஷமாகும். தெள்ளுப்பூச்சியானது "சிட்டின் (Chitin)" என்னும் ஒருவகைப் பதார்த்தத்தினல் மூடப்பட்டிருக்கிறது; இந்தப் பதார்த்தமானது எவ்வித ரசாயன வஸ்துக்களாலும் பாதிக்கப்பட முடியாதபடி, விசேஷ சக்தியமைந்த கடினமான பதார்த்தமாயிருக்கிறது; மேலும், இதுசாதாரணமாய் உபயோகிக்கக்கூடிய வேறெந்த வஸ்துவினுலும் பாதிக்கப்படகூடியதல்ல.

தெள்ளுப்பூச்சிபோன்ற பூச்சியை யழிப்பதற்கு ஒரே ஒருவகை இருக்கிறது; அதாவது, அதன் சுவாச அங்கங்களின் தொழிலைப் பாதிக்கக்கூடிய ஒருவஸ்துவை உபயோகிப்பதுதான்; (இந்தப் பூச்சியின்) உடலின் பக்கங்களில் இருக்கும் காற்று நுழையக்கூடிய வெகு சிறு துவாரங்கள்தான் ஷெ சுவாச அங்கங்களின் ஆரம்பஸ்தானமாகும்; இத்துவாரங்களின் வழியாய்ச் சென்று, சில பதார்த்தங்கள் ஷெ பூச்சியைக்கொல்லும் என்பது தெரிந்த விஷயம். இந்தப்பதார்த்தங்கள் சிலவகைபூசசிகளை யழிப்பதற்காக அடிக்கடி

உபயோகிக்கப்படுகின்றன; இவற்றிற்கு ஸ்பரிசவிஷம் என்று பெயர்; அநேக வருஷகாலமாக இவை உபயோகத்திலிருந்து வருகின்றன. தெள்ளுப்பூச்சியை யழிப்பதற்காக, ஏதோவொருவகை கெரோஸின் எண்ணெயையாவது க்ரீஸோட் என்னும் ஒருவகை மரத்தாரெண்ணெயையாவது, எண்ணெயும் ஸப்பும் (Soap) சேர்ந்த ஒருவகைக் கலப்பையாவது உபயோகிக்கலாம். அப்பட்டமாயுள்ள கெரோஸின் எண்ணெயைத் தெள்ளுப்பூச்சியின் உடலின் மேல் உபயோகித்தால் அந்தப் பூச்சி சாகும்: ஏனென்றால், கெரோஸின் எண்ணெய் சுவாசாங்கங்களின் தொழிலைப்பாதிக்கின்றது; அப்படியேதான் கார்பாலிக் ஆஸிடின் பதப்படுத்தாத ரூபமாகவிருக்கும் க்ரீஸோட் அல்லது உரைப்பு அதிகமாயுள்ள ஸப்பு கலப்புநீர்-ஷெ பூச்சியானது கிருமி ரூபமாயிருந்தாலுஞ்சரி பூரணவளர்ச்சியடைந்து இரத்தமுறிஞ்சும்பூச்சிரூபமாயிருந்தாலுஞ்சரி, அதைக்கொன்றுவிடும்.

கெரோஸின் எண்ணெயையாவது, பதப்படுத்தாத வேறே யாதொரு எண்ணெயையாவது, அப்பட்டமான க்ரீஸோட்டையாவது உபயோகிப்பதில் பலத்த பிரதிகூலங்களிருக்கின்றன; இவைகளை உபயோகிப்பது கஷ்டம்: நீக்குவது வெகு கஷ்டம்; எண்ணெய் ரூபமாயிருந்தால் இவை தண்ணீரோடு கலக்கவும் மாட்டா. பூச்சி சாஸ்திரத்தில் தேர்ந்த என்டொமாலொஜிஸ்ட் என்னும் நிபுணர்கள் பலவருஷகாலமாய்க் கெரோஸின் எண்ணெய் எமல்ஷன் என்னும் ஒருவகைக்கலப்புத் திரவத்தை உபயோகித்துவருகிறார்கள்; ஸப்புகலந்த ஜலத்தைக்காய்ச்சி, அதோடு கெரோஸின்எண்ணெயைச் சேர்த்து உண்டாகும் கலப்பைக் கடைவதனால் ஷெ திரவம் உண்டாகிறது; இந்த ரூபத்திலிருக்கும்போது, கெரோஸின் ஜலத்துடன் கலக்கிறது; அப்போது அதை எவ்வளவு உறைப்புடனாவது உபயோகித்துக்கொள்ளக்கூடும். தண்ணீரில் நூற்றுக்குப் பத்துபங்கு கெரோஸின் எண்ணெய எமல்ஷன் சேர்ப்பதனால் உண்டாகும் கலப்பானது பூச்சிகளை யழிப்பதற்குப் போதுமான வலிவுள்ளதாயும், வெகு சுவல்பசெலவு பிடிக்கத்தக்கதாயுமிருக்கிறது; ஆயினும், ஷெ கலப்பானது தெள்ளுப்பூச்சிகளை யழிக்கப்போதுமான வலிவுடையதல்ல. பதப்படுத்தாத பெட்ரோலியம் எண்ணெயைப் பதப்படுத்தும்போது அடியில் நின்றுபோகும் க்ரூட் ஆயில் என்னும் கனமுள்ள எண்ணெய் அல்லது வண்டலானது பூச்சிகளை யழிப்பதற்கு மேற்கண்டதைக்காட்டிலும் அதிக வலிவுள்ளது; ஆனால், அதை பதஞ்செய்த சுத்தமான கெரோஸின் எண்ணெயை எவ்வளவு சுலபமாக எமல்ஷனாக்க முடியுமோ அவ்வளவு சுலபமாக எமல்ஷனாக்க முடியாது; பூச்சிகளை யழிக்கும் விஷயத்தில் அதனால் உண்டாகும் பிரயோசனம் அதிகமாகையால், அந்த எமல்ஷன் தயார்செய்து "க்ரூட் ஆயில் எமல்ஷன்" என்னும்பெயர் வைத்து விற்கப்பட்டுவருகிறது. இந்தஎமல்ஷன் இம்பீரியல் என்டொமாலொஜிஸ்ட் அவர்களின் யோசனையைக்கொண்டு தயார்செய்யப்பட்டது. **இது பூச்சிகளை ஸ்பரிசத்தால் அழிப்பதற்குக் கிடைக்கக்கூடிய மருந்துகள் என்று தெரிந்திருப்பவைகள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததாய் இருக்கிறது.** இதில் நூற்றுக்கு 80 பங்கு பதஞ்செய்யாத எண்ணெயும், 20 பங்கு திமிங்கில எண்ணெய் ஸப்பும் சேர்ந்திருக்கிறது; இது தண்ணீருடன் தாராளமாய்க் கலக்கும் குழம்பாயிருக்கிறது; சாதாரணமாய் இதை (தண்ணீரில்) நூற்றுக்கு மூன்றுபங்கு கலந்து உபயோகிப்பது வழக்கம். நூற்றுக்குப் பத்துபங்கு சேர்த்துக்கலந்தால், தெள்ளுப்பூச்சிகள் எந்த நிலையிலிருந்தாலுஞ்சரி, அவைகளை அழித்துவிடுகிறது என்பதற்குச் சந்தேகமேயில்லை.

இந்தமாதிரி எமல்ஷனைக்கொண்டு ஒரு அறையை நன்றாய்க் கழுவினால், அந்த அறையில் எவ்வித பூச்சியும் இராது ; இந்த எமல்ஷனை உபயோகிப்பதனால், தீ அபாயம் முதலிய எவ்வித கெடுதியும் உண்டாகாமலிருப்பதோடுங்கூட செலவும் வெகு சுவல்பமாகவே பிடிக்கிறது ; இதை உபயோகித்தபிறகு தண்ணீர்விட்டுத் தரையினின்றும் கழுவிவிடலாம். தெள்ளுப்பூச்சிகள் நிறைந்திருந்த அறைகளினின்றும், அவைகளை இவ்விதமாய் நீக்கியிருக்கிறது; ஆனால் ஷை கலப்பானது சந்துபொந்துகளிலெல்லாம் நன்றாய் பாவியிருக்கவேண்டும். இந்த எமல்ஷனைக்கொண்டு கழுவின பிராணியினிடத்தில் தெள்ளுப்பூச்சிகள் இருக்கவேமாட்டா ; இந்த எண்ணெய் அதன் தோலுக்கும் மயிருக்கும் பிரயோசனகாமாயுமிருக்கிறது. இப்போது மூன்றுவருஷகாலமாக இந்த எமல்ஷன் உபயோகத்திலிருந்து வருகிறது ; இதைப் பூர்த்தியாகவும் வெகு நன்றாகவும் பரீட்சித்துப் பார்த்ததில், இதனால் எப்போதும் நன்மையே உண்டாகிறதென்று கண்டறியப்பட்டிருக்கிறது ; ஷை எமல்ஷன் (Agricultural Research Institute, Pusa) பூசாவில் ஸ்தாபித்திருக்கும் விவசாய விஷய வாராய்ச்சிச்சாலையில், பயிர்களை நாசமாக்கும் பலவிதமான புழுபூச்சிகளையும், வீடுகளில் உபத்திரவஞ்செய்யும் புழு பூச்சிகளையும் தெள்ளுப்பூச்சிகளையும் பிராணிகளைத் தொந்தரைப்படுத்துகிற உண்ணி முதலியவைகளையும் அழிப்பதற்காகச் சாதாரணமாய் உபயோகித்துவரும் ஸ்பரிசவிஷமாகும்.

க்ரீஸோட் என்பது தெள்ளுப்பூச்சிகளையழிப்பதற்காக உபயோகிப்பதற்கேற்ற இன்னொருவகை ஸ்பரிசவிஷமாகும். இதைச் சாதாரணமாய் "(Sanitary Fluid) சுகாதாரத்திரவம்" என்னும் பெயரிட்டு விற்கிறார்கள் ; இது ஸப்பு கலந்ததிரவம் போன்றதும் கறுப்பு நிறமுள்ளதுமான ஒரு திரவமாகும் ; இதில் ரெஸின் (குங்கிலிய) ஸப்பு சிறிதளவு சேர்ந்திருப்பதால், இது தண்ணீரில கலந்து எமல்ஷனாகிறது. இவ்விதமான சுகாதாரத்திரவங்களைச் சரியாய்த் தயார்செய்தால், அவைகளைக்கொண்டு பூச்சிகளை நன்றாய் அழிக்கக்கூடும் ; (ஜலத்தில்) நூற்றுக்குப் பத்துபங்கு எமல்ஷனைச் சேர்த்து உண்டாகும் கலப்பினால் - க்ரூட் ஆயில் எமல்ஷனால் எவ்வளவு பிரயோசனம் உண்டாகுமோ அவ்வளவு பிரயோசனம் உண்டாகும்.

இதர வகையைச்சேர்ந்த ஸ்பரிச விஷங்களில் எதுவும் தெள்ளுப்பூச்சிகளை யழிக்குங்காரியத்தில் மேலே கண்டவைகளைப்போல் அவ்வளவுபிரயோசனகரமானவையல்ல ; ஸப்பு கலப்புத்திரவத்தைமாத்திரம் உபயோகிப்பதாயிருந்தால், அது வெகு உறைப்புள்ளதாயிருக்கவேண்டியிருக்கிறது ; மேலும், அதற்கு அதிகசெலவும் பிடிக்கிறது : ரெஸின் ஸப்புகளும் கழுவபொருள்களும் அவ்வளவு பிரயோசனகரமானவையுமல்ல, இவைகளின் விலையும் அதிகம். கரோஸிவ் ஸப்ளிமேட் போன்ற உலோகசம்பந்தமான விஷப்பொருள்களும் - காஸ்டிக் ஸோடா, காஸ்டிக் போடாஷ் போன்ற ஆல்கலிவகைகளும் - ஆஸிடுகளும் (திராவகங்களும்) - உறைப்பான வேறே ரஸாயன பதார்த்தங்களும் தெள்ளுப்பூச்சிகளைப் பாதிக்கமாட்டா ; ஏனென்றால், அந்தப் பூச்சிகளை மூடியிருக்கிற சிட்டின் என்னும் பதார்த்தமானது ஷை பொருள்களை உள்ளே செல்லவொட்டாதபடி தடுக்கிறது ; அந்தப் பூச்சிகளின் சுவாச அங்கங்களின் தொழிலுக்கும் ஷை பொருள்களினால் பாதகமுண்டாகமாட்டாது. தொத்துவியாதி முறிமருந்துகளை உபயோகிப்பதனால் தெள்ளுப்பூச்சிகளுக்குக் குறித்த யாதொரு விதமாகப் பாதகமுண்டாகக்கூடியதாயிருந்தாலன்றி மற்றப்படி,

அந்த மருந்துகளை உபயோகிப்பதனால் வீண் காலதாமதமாகுமேயல்லாமல் எவ்வித பிரயோசனமும் உண்டாகாது.

தெள்ளுப்பூச்சிகளை யழிப்பதற்கு இன்னும் இரண்டு வகைகள் இருக்கின்றன. முதலாவது, "இன்ஸெக்ட் பவுடர்கள்" என்னும் பூச்சிகளை யழிப்பதற்கான ஒருவகை சூர்ணத்தை உபயோகிப்பதுதான்; அநேகவகை இன்ஸெக்ட் பவுடர்களில், பைரித்ரம் பவுடர் (Pyrethrum Powder) என்பது பிரதான வஸ்துவாக இருக்கிறது; இந்தப் பைரித்ரம் பவுடரின் உறைப்பைக் குறைக்கும்படியான பலவகை பொருள்கள் அதனுடன் கொஞ்சமாகவாவது அதிகமாகவாவதுசேர்ந்திருக்கின்றன; அவ்வித பவுடர் நன்றாய்ப்படியப்பெற்ற யாதொரு தனியான தெள்ளுப்பூச்சியானது சக்தியற்றுப்போய் ஒருவேளை செத்துப் போனாலும் போகலாம்; ஆனால், அப்பட்டமான பைரித்ரம் பவுடரை உபயோகித்தாலும் ஒரு கட்டிடத்திலிருக்கிற சில பூச்சிகளைத்தான் அது பாதிக்கக் கூடும்; அதற்குப் பிடிக்கும் செலவோ அதிகம்.

தெள்ளுப்பூச்சிகளை யழிப்பதற்கான இரண்டாவது வகை என்னவென்றால், ஆவியாய்ப் பரிணமித்த விஷயங்களை யுபயோகிப்பதுதான்; இவைகளில், (Carbon bisulphide) கார்பன் பைஸல்பைட், (Benzene) பென்ஜின், (Hydrocyanic acid) ஹைட்ரோஸையானிக் ஆஸிட் ஆகிய இவைகளின் ஆவியும் அடங்கியிருக்கிறது. கார்பன் பைஸல்பைட் புகை நன்றாய்ச் செலுத்தியிருக்கும் யாதொரு கட்டிடத்திலே எவ்விதமான பூச்சியும் இருக்கமாட்டாது; மற்றெந்த வகையை யனுசரித்தபோதிலும் இவ்விதமாகப் பூச்சிகளை அடியோடே அழிப்பது சாத்தியமாகமாட்டாது; ஆயினும் இந்த வகையை அனுஷ்டானத்தில் அனுசரிப்பது சாதாரணமாகக் கஷ்டமாயிருப்பதோடுகூட, இதனால் செலவும் அதிகமாகப்பிடிக்கிறது; ஆனால், பூச்சிகளையெல்லாம் ஒன்றுகூடத் தப்பாமல் ஒழித்துவிடவேண்டுமென்றால், கார்பன் பைஸல்பைடைக் கொண்டாவது ஹைட்ரோஸையானிக் ஆஸிடைக்கொண்டாவது புகைபோடுவதுதான் சிறந்தவகையாகும். (பூரண விபரங்கள்வேண்டுமென்று எழுதிக் கேட்கிற பட்சத்தில் அவைகள் தெரிவிக்கப்படும்.)

ஆனால், சாதாரணமாக (வீட்டின்) தரையையும் சுவர்களையும் தகுதியான யாதொரு பூச்சியழிக்கும் மருந்தைக்கொண்டு நன்றாய்க் கழுவினால், அங்கேயுள்ள தெள்ளுப்பூச்சிகளை அடியோடே அழிக்கமுடியும்; ஷெ பூச்சிகளையழிக்கும் முறைகளெல்லாவற்றிலும் இதுவே சிறந்த முறையாகும்; இந்தவிதமாய்ப் பூச்சிகளை யழிப்பதற்காக உபயோகிக்கக்கூடிய மருந்துகள் எல்லாவற்றிலும் சிறந்த மருந்து என்னவென்றால், ஜலத்தில் நூற்றுக்குப் பத்து பங்காகக் கலந்த க்ரூட் ஆயில் எமல்ஷன்தான். அந்த எமல்ஷனைச் சென்ற மூன்று வருஷகாலத்தில் அனுஷ்டானத்திலே பரிசோதித்திருக்கிறது.

அதிக வேலை செய்யவேண்டியிருந்தால், யாதொரு பீச்சாங்குழல் அல்லது ஸ்ப்ரேயர் என்னும் நீர் தூவுவதற்கான யாதொரு சாதகத்தைக்கொண்டு அந்த எமல்ஷனை உபயோகித்தால் செலவு கூடியமட்டில் குறைவாயிருக்கும். எமல்ஷனைக் கொஞ்சமாக உபயோகிக்கவேண்டியிருந்தால் நல்ல பீச்சாங்

குழலொன்றை உபயோகிக்கவேண்டும்; ["ஏபால் (Abol)" என்னும் பீச்சாங்குழல்தான் எல்லாவற்றிலும் சிறந்தது]; எமல்ஷனை அதிகமாக உபயோகிக்கவேண்டியிருந்தால், "(Success Knapsack Sprayer) ஸக்ஸெஸ் நாப்ஸாக் ஸ்ப்ரேயர்" என்னும் நீர் தூவுவதற்கான சாதகத்தைஉபயோகிக்கவேண்டும்; அப்போதுதான் ஷெ எமல்ஷன் சரியாய் எங்கும் பாவிவிழும். எமல்ஷனைத் தரையிலும் சுவர்களிலும் துளிதுளியாய்த் தெறிக்கும்படியாகத் தெளித்தால், அது - சாதாரணமாய் அதை ஊற்றிவிட்டால் எவ்வளவு ஊடுருவிச் செல்லுமோ அதைவிட அதிகமாக ஊடுருவிச் செல்வதுடன் எவ்வளவு பிரயோசனகரமாக இருக்குமோ அதைவிட அதிக பிரயோசனகரமாகவும் இருக்கும்; மேலும், சாதாரணமாய் அதை ஊற்றிவிடும்போது எவ்வளவு செலவு பிடிக்குமோ அதைவிட வெகு குறைந்த செலவுதான் பிடிக்கும்.

(4 காலன் அளவுள்ள) ஒரு கெரொஸின் எண்ணெய்டப்பி ஜலத்தில் 3பயின்ட் க்ரூட் ஆயில் எமல்ஷன் உபயோகிக்கப்படுகிறது: இதுவே நாப்ஸாக் ஸ்ப்ரேயர் என்னும் சாதகத்திற்கு ஒருதடவை போடவேண்டிய எமல்ஷனின் அளவாகும். க்ரூட் ஆயில் எமல்ஷனைத் தண்ணீரில்விட்டுக் கலக்கினால், அது சுலபமாகத் தண்ணீரோடு சேர்ந்துவிடுகிறது; அப்படி கலந்த திரவத்தைப் பூச்சிகள் சேர்ந்துள்ள, கட்டிடத்தின் எல்லாப்பாகங்களிலும் துளிதுளியாய்த் தெறிக்கும்படியாக வெகு விரைவாய்த் தெளித்துக்கொள்ளலாம். ஸக்ஸெஸ் நாப்ஸாக் ஸ்ப்ரேயர் என்னும் சாதகத்தை உபயோகிப்பதானால் மேலேகண்ட குழம்பை வடிகட்டியின்மேல் வைத்துக்கொண்டு, எந்திரத்திலிருந்து தண்ணீரை அதன்மேல் பம்ப்செய்தால், எமல்ஷன் சீக்கிரத்தில் உண்டாகி, ஷெ ஸ்ப்ரேயரில் சரியானவிதமாய்க் கலந்துகொள்ளும்.

க்ரூட் ஆயில் எமல்ஷன், சுகாதாரத்திரவம், ஏபால் பீச்சாங்குழல், நாப்ஸாக் ஸ்ப்ரேயர் ஆகிய இவைகள் எல்லாம் இந்தியாவிலே கிடைக்கும்.

க்ரூட் ஆயில் எமல்ஷன் 5 காலன்கொண்ட ட்ரம் என்னும்நீண்டுருண்ட ஒரு ஏனத்தின் விலை ரூ 9-8-0; இதனால் பூச்சியழிக்கும்திரவம் ஐம்பதுகாலன் தயார்செய்துகொள்ளலாம்; 5 காலன்கொண்ட ஒரு ட்ராம் சுகாதாரத்திரவத்தின் விலை 12 ரூபாயாகையால் அந்தத்திரவம் நீங்கலாக, பூச்சியழிக்கும் மற்ற மருந்து வகைகளைக்காட்டிலும் ஷெ எமல்ஷனின் விலை மொத்தம் குறைவாயிருக்கிறது.

ஏபால் பீச்சாங்குழல் அல்லது வேறே யாதொரு மாதிரி பீச்சாங்குழல் சுமார் 9 ரூபாய்க்குத் கிடைக்கும்; ஸக்ஸெஸ் நாப்ஸாக் ஸ்ப்ரேயர் என்பது 46 ரூபாய்க்குக் கிடைக்கும்.

நாப்ஸாக் ஸ்ப்ரேயரைப்பற்றியும் க்ரூட் ஆயில் எமல்ஷனைப்பற்றியும் விவரங்களடங்கிய சிறு பத்திரிகைகள் இம்பீரியல் என்டொமாலொஜிஸ்ட் அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்; இன்னும் ஏதாவது சங்கதி தெரியவேண்[illegible]ஏதாலும் அவரைக் கேட்டால் தெரிவிப்பார்.

புதிய கல்வி இலாகா சட்டங்கள்.

தற்காலம் கல்வி விஷயத்தில் அநேக சீர்திருத்தங்கள் கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகின்றனவென்று அறிகின்றோம். இச்சீர்திருத்தங்களில் சிலவற்றை அடியிற் குறிப்பிடுகிறோம். 16-வயதுக்குள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு மாணவர்கள் போகக்கூடாது. அவ்விதம் பரீக்ஷைக்குப்

போனாலும், 3-வருஷத்திற்குமேல் போகக்கூடாது. பள்ளிக்கூடங்கள் எலி
மெண்டரி எனவும், ஸெகண்டரி எனவும் அழைக்கப்படும் எல்லா விடங்களி
லேயும் கவர்ன்மெண்டாரின் மேல்பார்வையின்பேரிலேயே பள்ளிக்கூடங்கள்
ஏற்படுத்தப்படும் என்பவைகளாம். இனி இச்சீர்திருத்தங்களால் இந்திய மாண
வர்கள் அடையும் கஷ்டத்தையும், பழைய விதிகள் நமக்கு செய்த நன்மையை
யும்பற்றி சற்று கவனிப்போம். புதுவிதிகள் லோயர் ஸெகண்டரி (மிடில்)
ஸ்கூல் வைக்க இடங்கொடாதபடியால், இப்பொழுது சுதேசிகளின் மேற்
பார்வையின்பேரில் நடத்திவரும் மிடில் ஸ்கூல்களெல்லாம் நிறுத்தப்படுமென
வும் ஒருவதந்தி உலாவுகின்றது. அதுவுமல்லாமல் சுதேசிகளால் நடத்தப்
பட்டுவரும் ஹைஸ்கூல்களுக்கெல்லாம் 10,000 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டு
மாம். இப்புது விதிகள் கிராண்டை மிக சொல்பமாகச் செய்துவிட்டது.
எலிமெண்டரி ஸ்கூல்களில் 3-வது வகுப்புக்குமேல் வைக்கக்கூடாதாம்.
பழைய விதிகள் பிரைமெரி ஸ்கூல், மிடில் ஸ்கூல், ஹைஸ்கூல் முதலியவை
களை ஏற்படுத்த இடங்கொடுத்திருந்தன. கிராண்ட் என்னும் ஸகாயத்
தொகையைப் பழையவிதிகள் அதிகமாய்க் கொடுக்க இடங்கொடுத் திருந்த
படியால், அதை உத்தேசித்தாவது அங்கங்கே பிரைமெரி ஸ்கூல்களும் மிடில்
ஸ்கூல்களும் ஏற்படுத்தப்பட்டு சுதேசிகளால் நடத்தப்பட்டு வந்தன. புது
விதிகளை யனுசரித்து எலிமெண்டரி ஸ்கூல்களாவது ஸெகண்டரி ஸ்கூல்க
ளாவது ஏற்படுத்தப்படவேண்டும். ஸெகண்டரி ஸ்கூல்களுக்கு ஜாமீன்
கட்ட வேண்டுமாகையால் அவைகளை நம்மவர்கள் ஏற்படுத்துவது துர்லபம்
தான். புதுவிதிகளின் பிரகாரம் சம்பளங்கள் முன்னைவிட அதிகப்படும்
என்பதற்கு சந்தேகமில்லை, ஆகவே ஏழைகளின்பாடு திண்டாட்டத்தில் முடிகி
றது. சிறு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு கவர்ன்மெண்டாரால் ஏற்
படுத்தப்பட்டிருக்கும் பட்டணங்களிலுள்ள ஸெகண்டரி பள்ளிக்கூடங்களை
நோக்கி அனைவரும் புறப்படல் வேண்டும். அவ்விதம்போதல் ஏனையோ
ராகிய வறியர்கட்கு எளிதன்று. பொதுநன்மையை உத்தேசித்து எலிமெண்
டரி ஸ்கூல்களைப் பலர் நடத்திவந்தாலும் இன்ஸ்பெக்டர் பிள்ளைகளைப் பரீ
க்ஷிப்பதற்குமுன் இவர்களைப் பரீக்ஷித்து அந்தப் பதவிக்குத் தகுதியில்லை
யென்று சொல்லிவிட்டால் அவ்வுபாத்தியாயர்களின் வேலை அத்துடன் முடி
கிறது. தத்தம் பிரஜைகளுக்குக் கல்வியைப்புகட்டி ஞானத்தை அபிவிருத்தி
செய்து ராஜாங்க அதிகாரத்தில் பங்குபெறச்செய்வது கவர்ன்மெண்டாரின்
கடமையாய் இருக்க, இவ்விதம் விதிகளை மாற்றி இந்தியராகிய நம்மவர்கட்குக்
கல்வி இலாகா விஷயத்தில் கொடுத்திருந்த சுதந்திரத்தைப் பிடுங்கி மூடர்க
ளாகவைத்து அடிமைகளைப்போல ஆள எண்ணங்கொண்டது நம்மவர்களின்
துரதிர்ஷ்டத்திற்குக் காரணமாக நிற்கின்றது. இங்கிலாந்து, ஜப்பான்,
அமெரிக்கா முதலிய தேசங்களில் சிறுவர்கள் யா[illegible]ரு நிபந்தனையுமில்லா
மல் சுயாதீனமாய்ப் படித்துக்கொண்டுவர இவ்விதநியா[illegible] இவ்
வித நிபந்தனைகள் ஏற்படுத்தப்படவேண்டும். மேலும் இச்சென்னை ராஜதானி
யிலுள்ள சுதேசிகளில் ஏழ்மையாயிருப்பவர்கள் தங்கள் பிள்ளைகளை பி. ஏ.
பரீக்ஷைவரையில் படிக்கவைத்துப் பிறகு தொழி[illegible] ஸம்பந்தமான படிப்பைப்
படிப்பிக்க ஸக்தியில்லாத கேஸ்களிலும், வேறு காரணத்தால் பிள்ளைகளை
பி. ஏ. பரீக்ஷைவரையில் படிக்க சௌகரியமில்லாத கேஸ்களிலும் தங்கள்
பிள்ளைகளை ஓவர்ஸீர், ஸப் ஓவர்ஸீர் என்ற படிப்புக்காகப் பிரவேசப் பரீ
க்ஷைக்குப் போகச்செய்து பரீக்ஷையில் தேறி எடுத்துக்கொண்டவர்களைச்

சென்னை இஞ்சினீரிங் காலேஜுக்கனுப்பிப் படிக்கச் செய்கிறார்கள். ஓவர்ஸீர் பரீக்ஷைக்கு 2½ வருஷகாலமும் ஸப் ஓவர்ஸீர் டிராப்ட்ஸ்மென் பரீக்ஷைகளுக்கும் 2 வருஷ வீதமும் வாசிக்கவேண்டியதா யிருக்கிறது. ஓவர்ஸீயர் கிளாஸில் படிக்க சுமார் ரூபா 800-ம், சப் ஓவர்ஸீர் கிளாஸில் படிக்க சுமார் ரூபா 650-ம், டிராப்ட்ஸ்மென் கிளாஸில் படிக்க சுமார் ரூபா 550-ம் செலவு செய்யப்படவேண்டி யிருக்கிறது. இதற்குமுன் மேற்படி கிளாஸ்களில் படித்தவர்களைவிட இப்போது சிலவருஷங்களாக சேருகிறவர்கள் விசேஷத் திறமையுள்ளவர்களென்பதிற் சந்தேகமில்லை. இதற்குமுன் மேற்படி இன்சினீரிங் காலேஜில் பரீக்ஷையில் தேறாதவர்கள் நிரம்பவும் உபாயம் என்றும் அப்படித்தவறினவர்களுக்கும் ஏதாவது ஓர் உத்யோகம் செய்துகொடுப்பதும் வழக்கமென்றும் தெரியவருகிறது. இப்பால்சிலவருஷங்களாகப் பரீக்ஷையில்தவறுகிறவர்களின் தொகை ஜாஸ்தியாகவேயிருக்கிறது. அதின்காரணம் பரீக்ஷை செயயும் உத்யோகஸ்தர்களுக்கும் தெய்வத்துக்கும்தான் தெரியக்கூடியது. பக்ஷிகள் கூடுகட்டுவதற்குச் சாமான்கள் சேர்ப்பதுபோல் தங்கள் ஆயுளில் பல வருஷம் வாயையும் வயிற்றையும் ஒடுக்கிச்சேர்த்துவைத்த சொற்பதனத்துடன், பக்கத்தில் கொஞ்சம்கடனும் வாங்கிப்போட்டு இன்சினீரிங்காலேஜில் பிள்ளைகளைப்படிக்கவைத்துப் பரீக்ஷையில் தேறாமல் அந்தியகாலத்தில் ஜனங்கள் அதோகதியாய்ப்போகிறார்கள். இனியாவது ஏழைகள் தங்கள்பிள்ளைகளை இஞ்சினீரிங்காலேஜுக்குப் படிக்க அனுப்பும்விஷயத்தில் தீர்க்காலோசனை செய்து நிச்சயித்தால் பலகுடும்பங்களுக்கு நன்மையுண்டாகுமென்று இதைத் தெரிவிக்கலானோம். பரீக்ஷையில் தேறினபிள்ளைகள் அதிகமாய்த் தேவையில்லாத காரணத்தின்பொருட்டு தேறாதவர்களின் ஸங்கியை அதிகரிக்கிறதாயிருந்தால், தேவையுள்ள அளவுக்குள்ள பிள்ளைகளைமாத்திரம் மேற்சண்ட கிளாஸ்களில் சேர்த்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் உத்திரவுசெய்தால் பல ஏழைக்குடும்பங்களுக்கு பெருத்த உபகாரமாயிருக்கும். (பெருந்தொகைகளைச் செலவுசெய்தாவது இஞ்சினீரிங்காலேஜில் ஏன் படிக்கப்போகிறார்கள்? ஏதேனும் தொழிற்படிப்புகற்று ஏன் ஜீவனஞ்செய்யக்கூடாது?)

பத்திரிகையின் பிரயோஜனம்.

உலகத்தில் மனிதராய் ஜனித்தவர்கள் செய்துமுடிக்கவேண்டும் கடமைகள் பலவுளவேனும், அவற்றுள் ஒவ்வொருவரும் தம்தம்மாலியன்ற அளவும் பரோபகார நிமித்தம் பிரயாசைப்படவேண்டுமென்பது ஒரு முக்கியகடமையாயிருத்தல் யாவருக்கும்தெரிந்தவிஷயம். பரோபகாரமென்றால் பிறருக்குஉதவிசெய்தல்; அதாவது பிறருடைய குறைகளை நீக்கி அவர்களுக்குத் திருப்தியுண்டாக்குதல். உலகத்தில் ஜனங்களுக்குள்ள குறைகள் பற்பலவிதமாயிருக்கின்றன; சிலர் ஆகாரமில்லாமல் வருந்துகின்றனர்; சிலர் கல்வியை விர்த்திபண்ணப் போதுமான பணமில்லாது துக்கப்படுகின்றனர்; சிலர் வியாதிகளால் துன்பம் அடைகின்றனர்; இன்னமனேக விதமான குறைகளெல்லாம் நிவர்த்திக்கப்படவேண்டுமென்பதே கடவுளின் கருத்து. ஆயினும் இவைகளை நிவர்த்திக்கத்தக்க ஸக்திகளையெல்லாம் அவர் ஒருவரிடத்தில் மாத்திரம் கொடுத்துவிடவில்லை. ஒவ்வொருவரிடத்திலும் ஏதேனுமொன்றைப் பரிகரிக்கத்தக்கஸக்தியைக்கொடாதிருக்கவுமில்லை. ஆதலின் ஒவ்வொருவரும் தம் தம் ஸக்தியைப் பிரயோகித்து மற்றவர்களுடைய குறைகளை நீக்குவதே அவரவருடைய கட

மையாகும். நம்முடைய தேகத்துக்கு எவ்வாறு உணவு அவசியமோ அவ்வாறே நம் தேசத்து விர்த்திக்கு பத்திரிகை அவசியமாயிருக்கின்றது. ஆனால் எத்தனையோ தமிழ்பத்திரிகைகள் நீரிற் குமிழிபோல் தோன்றிமறைந்தன ; இன்னுந் தோன்றி மறைந்துகொண்டிருக்கின்றன. அவைகளை நடத்தும் பத்திராதிபர்கள் ஊரார்பணத்தை வியாபிக்க எண்ணிப் பத்திரிகையை நடத்தாவிட்டாலும், சிலசந்தாதாரர்கள் முற்பணத்துக்கு மோசமாகப் பலபெயர் பணங்கொடுக்காத காரணத்தால் நின்றுபோகிறது. சுமார் இருபதுவருஷத்திற்குமுன் பத்திரிகையென்றால் இன்னதென்றே தாலூக்கா வாலிகளுக்குக்கூடத் தெரியாது. ஆப்கானிஸ்தானம், பர்மாசண்டை நடக்கும்போது இன்னாருக்கும் இன்னாருக்கும் சண்டை நடக்கிறதென்றும், இன்னகாரியத்திற்குச் சண்டைநடக்கிறதென்றும் தெரிந்தவர்கள் வெகுசொற்பம். ஒரு ஜில்லாவிற்கு நாலைந்து பத்திரிகைகள்கூட வருவது அபூர்வம். பத்திரிகையென்று யாராவது உச்சரித்தால் "என்னடா உனக்கு வேலையில்லையா? காசைக்கரியாக்காதே. உன்முன்னோர்களெல்லாம் இருந்தமாதிரி நீயும்காலத்தைத்தள்ளாமல் வீண்டம்பம்பண்ணாதே உள்ளதும் போய்விடும். உங்கள் பெரியவாள் என்பேரில் வைத்திருந்த அபிமானத்தினால் இவ்வளவு சொல்லவந்தேன். பொழுதுபோகாவிட்டால்ஒரு கட்டு இஸ்பேட்டு சீட்டுவாங்கி நாலுபோய் விளையாடி ஆநந்தப்படலாகாதா" என்பார்கள். அந்தக்காலத்தில் சீமையில் பார்லிமெண்டு ஸபை ஒன்று உண்டென்றால், யாரும் நம்பமாட்டார்கள். காங்க்ரெஸ் ஸபையொன்று இந்நியாவில் நடைபெற்று வருகிறதென்றால், அதை செவிகொடுத்துக் கேட்கமாட்டார்கள். பம்பாயிலும் சென்னையிலும் பெண்பிள்ளைகள் படிக்க பள்ளிக்கூட மேற்படுத்தப்பட்டிருக்கிறதென்றால், அதை நம்பாமல் பரிஹசிப்பதுடன் இப்படிப்போல என்னென்ன அநியாயங்கள் நடக்கப்போகின்றனவோ, எல்லாம் கலிகாலத்தின் கொடுமையென்று பெருமூச்சுவிட்டு வருந்துவார்கள். இத்தேசத்து அரசாக்ஷிக்கு வரவுசெலவு கணக்கொன்று திட்டமாய்வைக்கப்படுகிறதென்றால், அப்படிச்சொல்பவனைப் பித்தனென்று அவமதிப்பதுமன்றி, என்னடா பயித்தியக்காரா, வெள்ளைக்காரன் இத்தேசத்துப்பணங்களை வாரிக்கொண்டு போக வந்திருக்கிறவன், உன்னிடங்கணக்கெழுதிக்காட்டுவதேதென்பார்கள். இங்கிலாந்தில் இந்தியாமந்திரியும், அவருக்கு ஓர் ஆலோசனை சபையுமுண்டென்று படித்தவகுப்பாருக்கே அப்போது அநேகருக்குத் தெரியாது. கிராமக்குடிகளாகிய ஒவ்வொருவரும் பொருத்தமுற இந்த அரிய கிராமாதிகாரிகெஜட்டை தங்கள் கரத்தேற்று முன்னுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம். அன்றேல் தேசாபிமானம் பாஷாபிமானம் முதலியசிறந்தகுணங்களில்லாதவர்களாகவன்றோ ஆய்விடுவோம். தினப்பதிப்பு வாரப்பதிப்பு பத்திரிகைகளைக்காட்டிலும் மாதம் மாதம் பிசகாமல் வெளிவந்துலவும் இப்பத்திரிகை விசேஷமுடையதென்பதை நம்மவர் தெளிந்திடவேனாகாது? கையொப்பமும் கொஞ்சமாயிருக்கின்றது. இப்பத்திரிகையை பல்லோர்களெல்லாரும் அ[illegible]ப் பூஷித்துப்பூஷணமாயேற்றுப் பொலிந்துவருகின்றதும் பெரிய அனுபவமாயிருக்கின்றது. அதிகப்பணம் கொடுத்து வாராந்திரபத்திரிகைகளை வாங்கிப்படிக்க அநேகருக்குச் சரிப்படாமலிருக்கும். மேலும் நமது இனியகெஜட்டில் மற்ற பேபர்களைப்போலல்லாது முக்கியமாய் கிராமாதிகாரிகளுக்கு வேண்டியதும், கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும்சட்ட திட்டங்கள் நியாயமானவையா, அவைகளால் ஜனங்களுக்கு உபயோகமா அல்லது கெடுதலா என்பதைக்குறித்து கனம் மெம்பர்கள் கொண்டுவரும் மசோதாக்களைப்

பற்றிய விவரங்களும், ஆச்சரியமான ஸிவில்கிரிமினல் விவகாரங்களின் சங்கிரகத்துடன் தீர்ப்புகளும், தாலூக்கா உத்தியோகஸ்தர்கள் செய்யும் அக்கிரமங்களையும், அதற்காக மேலதிகாரிகள் செய்கிற பரிகாரங்களையும், நமது நாட்டிலுள்ள [illegible]றைகளையும், அவைகளுக்காக கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய ஏற்பாடுகளையும், கல்வி, கைத்தொழில், விவசாயம் முதலியவைகளைக்குறித்தும் இவைபோன்ற கிராமக்குடிகளுக்கனுகூலமான பற்பல விஷயங்களும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. கவர்ன்மெண்டார் சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருமுன் பொது ஜனாபிப்பிராயத்திற்காக கெஜட்டுகளில் தானே பிரசுரிக்கிறார்கள். அவற்றை வாங்கிப்படித்தால் மாத்திரம் தானே குற்றம்குறைகளைத் தெரிந்துகொண்டு திருத்த மனுசெய்துகொள்ளலாம். மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால் தற்காலம் யோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கும் இனாம் கீழ்த்தரப்படிப்பு விஷயமும், வில்லேஜ் செஸ்தள்ளுபடி செய்யப்பட்டதும், வருமானவரி, உப்புவரி குறைக்கப்பட்டதும், இலகுவான தந்தி விகிதம் ஏற்பட்டதும், தபாலிலாகாவில் அதிக வசதிகளேற்பட்டதும் இவைபோன்ற பல பெரும் விஷயங்களும் காங்கிரஸ் மகாஸபையாலும் பத்திரிகைகளில் பன்முறை எடுத்துரைக்கப்பட்டுழைத்ததினாலுண்டான பெரும்பயன்களன்றோ? இன்னம் இவைபோன்ற பலவிஷயங்களும் கிராமக்குடிகள் கண்ணாரக்கண்டு களிக்கக்கூடிய சௌகரியமுள்ளவைகளாயிராவிடினும் நமது கெஜட் போன்ற பத்திரிகைகளையாவது படித்துப்பார்த்தால் தானே ஒருவாறு தெரிந்து தெளிந்து திருப்தியடையலாம்.

ஆகையால் கிராமங்களிலுள்ளோர் அனைவரும் பட்டணவாஸிகளைப்போலத்தனித்தாவது ஏகோபித்தாவது கூடியவரையில் நமது கெஜட்டை வருவித்துப்படித்துணர்ந்து அநேகவித பயன்களையடைந்து மேன்மையடைவதோடு, பொதுஜனங்களுக்கும் உபகாரம் செய்துகொண்டு ஸகோதரவாஞ்சையை விர்த்திசெய்து வருவார்களாக.

ரயத்துகள் ஏழையானதற்கு இதுவும் முக்கியகாரணம்.

வரிப்பளுவால் ஏழையானது பாதியும் நிலங்கள் விளைவுகுன்றியதும் அனாவசியமாய் விவாகாதிகளிலும் துர்வழக்கில் ஒழித்ததும் ஒருபுறமிருக்க கீழேவிவரிக்கும் மதியின்மையிலும் பூராவாக தரித்திரத்தை அடைந்து வருகிறார்கள். அதிகமான பூஸ்திதியுடையவர்களும், சொற்ப பூஸ்திதியுடையவர்களும் தங்களுக்கு 2, 3, ஆண்குழந்தைகளும் பெண்குழந்தைகளும் ஜனித்ததேயானால், ஆண்களை அயலாரைப்பார்த்து கடன்வாங்கியாவது ஒவ்வொருவனையும் பி. ஏ. வரை படிப்பிக்கவெண்ணித் தமக்குவரும் வருமானத்திற்குத் தக்கபடி பரீக்ஷையில் தேறி வெளிவந்த மறுதினமே 1000-கணக்காகப் பொருள் சம்பாதிப்பானென்று நம்பிப் பொருளைச் செலவிடுகிறார்கள். சிலர் தேறினாலும் இக்காலத்தில் இவர்கள் அபிப்பிராயம்போல் பொருள் ஸம்பாதிக்கவில்லை. சிலர் எழுரூபாய் சம்பளத்தில் அமர்ந்து 10-வருஷம்கழித்து ரூபா 100-சம்பளத்தில் வருவதுமிகவும் கஷ்டசாத்தியமாகிறது. இதற்கும் வெகு சிபார்சும், பொருட்செலவும்வேண்டும். மற்றவர்கள் கைப்பொருளையும் இழந்து வருமானமுமின்றித் தியங்குகிறார்கள். இந்நிலையிற் சிலர் தவிர பலர் ஆஸ்திக்கும் கடனுக்கும் சரியென்ற ஸ்திதியில் நிற்கிறார்கள். இதில் ஆண்களுக்கு வயது 6, 7-ல் விவாகம் செய்யப்பட்டு 14, 15-ல் ஸோபனமுகூர்த்தம்

நடத்தப்படுகிறது. பெண்கொடுத்தவர் எண்ணுகிறார். இப்பையனோடு பிறந்தவர்கள் மூன்று ஆணும் பெண்ணுமாகிறதே, பையன் தகப்பனுக்கு இருக்கும் ஆஸ்தியே 10-ஏகர்தானே, இதிலும் கடன் 3000-இருக்கிறதே, இரண்டுபெண்களின் கலியாணத்திற்குங் குறைந்தது 3000-பிடிக்கும், வருஷத்தில் வரும் வருமானமும் கிஸ்திக்கும் முன்கடனின்வட்டிக்கும் ஆகாரத்திற்கும் கண்டு மிஞ்சியது இல்லையே, அப்படியிருக்க நமது பெண்ணை எப்படி ரக்ஷிக்கமுடியுமென்று எண்ணிப் பையனுக்குப் பாகஞ்செய்யத் தாமே முயலுபவர் சிலர். அப்படி பாகித்து ஒதுங்கவைத்தால் செட்டாகக் குடித்தனம் நடத்தித் தனவந்தனாக மாப்பிள்ளையை ஆக்கிவிடலாமென்று ஒருவகை, மற்றொருவகையாவது தமது புதல்வர்களில் ஒருவருக்கொருவரிட்டுவரும் சச்சரவால் தகப்பனை விலக்கிவைப்பது ஒருவிதம், சிலர் குடும்பத்தில் தறுதலையாகத்திரியும் மகனை யடக்கிப்பார்த்து தன்வழிவாராதநிமித்தம் விலக்கிவிடுவது ஒன்று: இவ்விதம் அநேகம்வழியாய் இவர்களுக்குள்ள சொற்ப பூஸ்திதியையும் அதிக ஸ்திதியையும் பாகிப்பதில் ஒரேநிலத்தில் எல்லோரும் பிரியம்வைத்துக் குறுக்கே வாப்பிட்டுப் பிரிக்கவும் ஒரு கிராமத்தையே நாலு ஐந்து கிராமமாகப்பிரிக்கவும் நேருகிறது. இதினால் விளைவுகுன்றிவிடுகிறது. தவிரவும், ஒரேகுடித்தனமாயிருப்பதில் வீட்டில் சமயல்முதல் வாசற்கூட்டிமாட்டிடயன், பிச்சைக்காரன், நாட்கிழமைவரும்விருந்துகள் எல்லாம் ஒன்றாயிருக்கும்; தனியானால் மேற்கூறிய யாவத்தும்தனித்தனியாகிவரும். சொற்பவருமானத்தில் அதிகச்செலவு நேரிடுவது எவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கும்? செலவுக்கு மாமனார் ஏழையானால் மாப்பிள்ளையின் கிரஹமே அவனுக்கு வாசஸ்தலமாகிறது. சிலர் துன்மார்க்கத்தால் அடக்குவாரின்றிச் சொத்தைத்தொலைக்கவுமிடமாகிறது. சிலருக்குத் தம் உத்தேசம்போல கைகூடுமாயினும் பலருக்குத்தனியானவுடன் 2, 3, பெண்கள் பிறந்து பிரிந்தசொத்தையுமிழக்கும்படி கலியாணத்தில் செலவுசெய்து வருகிறார்கள். சிலர் பெண்சாதியே தெய்வம், அவள் வார்த்தையே வேதமந்திரமென்று கருதி அவர்களின் இஷ்டம்போல் ஆடையாபரணங்களை உதவுவதில் பொருள்போகிறது. சிலர் தமது முதியவரின் ஆளுகையற்றிருப்பதால் குடிமுதலிய கெட்டகாரியத்தில் சொத்தைத் தோற்கிறார்கள். சிலர் துரோகிகளான துஷ்டர்களின் துர்ப்போதனையால் மதியையிழந்து நஷ்டம்தரக்கூடிய வியாபாராதிகளில் சொத்தை இழக்கவும் பிரிவினையே காரணம். பலசில்லரைத்துரும்புகள் கூடிய ஒருகயிற்றை யறுக்க யானையாலு முடியாது. ஒருமித்திருந்தால் அதினாலுண்டாகும்பயனை அளவிட்டுச்சொல்ல முடியாது. ஒருபூமியைக் குடும்பத்திலுள்ள நால்வர் கவனித்தால் அதில் கிடைக்கும் லாபம் எவ்வளவு? ஒருவியாபாரத்தில் ஒரேகுடும்பத்தில் பலர் கவனித்தால் எப்படி விருத்தியடையும்? வேறுமனிதர்களைச் சம்பளமுதவியதுகொடுத்து ஏற்படுத்துவதிலுண்டாகும் செலவும் பந்தோபஸ்துக்குறைவும் நேரிடா. இன்னம் எந்தவிரோதியும் இவர்களை எதிர்க்கமுடியாது. எவ்வளவு பேர்தங்கள்கீழ் வேலைக்காரர்களிருப்பார்கள்? இவற்றை யோசியாது தனியே பிரிந்துபோக எண்ணுவதால் பெருத்தநஷ்டம் நேரிடுமென்பதைக் கவனிக்காமல் பாழ்படுகிறார்கள். ஏழையானதைக் கண்டு பிறரும் பழிக்கிறார்கள்.

ஸ்திரீகள்.

இக்காலத்தில் ஸ்திரீகளைப்பற்றி அடிக்கடி அநேகர் பலவிதமாய்ப் பிரஸங்கிக்கின்றனர். ஆனால் ஸ்திரீகட்கு எது அவசியமென்பதை யாரும் எடுத்

துச்சொல்லாமல் மறந்திருக்கிறார்கள். ஸ்திரீகளை இரண்டுவிதமாய்ப் பிரிக்கவேண்டும்: ஒருவகுப்பார்படித்தவர்கள்; மற்றொருவகுப்பார் கல்விகல்லாதவர். கல்வியறியாதவர்களில் இரண்டுவிதமுண்டு, அவையாவன : பூர்வீகர்களான விருத்தஸ்திரீகள் படிப்பென்னும் வாஸனையையறியாதவர்கள்; இக்காலத்துத் தருணிகளிலனேகர் படியாமலிருக்கின்றனர்—இவ்விருவகுப்பாரும் படிப்பையறிந்தவர்களல்லர். இவர்களில் சிரேஷ்டர் யாரென்பதை இங்குசொல்வது அவசியம். விருத்த ஸ்திரீகள் ஸ்வபாவத்தில் படிப்பறியாவிட்டாலும் புராதன பதிவிருதைகளின் கதைகளைப் பெரியோர்களிடம் கேட்டு அவைகளை அங்கீகாரம் செய்துகொண்டு அவ்விதமே தங்கள் பர்த்தாக்களிடத்தில் பணிந்துநடக்கின்றனர். பதிஸேவையேபரமோத்கிருஷ்டமென்றும் புருஷனுடைய பாதாரவிந்தமே பரதெய்வமென்றும் நினைத்து புருஷனைக் கிஞ்சிற்றேனும் அலக்ஷியம் செய்யாமல் எதிர்வாயாடாமல் பதியால் என்னகஷ்டம் நேர்ந்தாலும் பொறுமையோடு ஸகித்துக்கொண்டு விவேகிகளாய்க் காலம் கழிக்கின்றனர். படியாததருணிகள் இவர்களைப்போல் அனுசரிப்பார்களாயின் ஒருவிதத்தில் நலமென்றே சொல்வோம். ஐயோ! இவர்களுக்கு படிப்பும் வரவில்லை. பூர்வீக ஆசாரணையும் அணுகமாட்டேனென்கிறது.

இவர்களின் பதிகளோ ஸரஸ்வதி புத்திரர்களாயிருக்கின்றனர். விதிவசத்தால் இந்த அங்கனைகளுக்கு பதிஸேவையென்பதே தெரியவில்லை. கற்றுக்கொடுப்பார் அதற்கு முன்னில்லை. பெற்றோர்கள் சொல்லிக்கொடுக்கும் வழக்கமே கிடையாது. இதனால் பர்த்தாக்களை நிந்திப்பதும், அவர்களுக்கு கஷ்டத்தைக்கொடுப்பதும், பரநிந்தை, தோஷாரோபணை, பிராணிஹிம்சைகளைச் செய்வதும் அதிகரிக்கின்றன. படியாத இருதிறத்தார்களில் பிராசீனஸ்திரீகளேயே சிரேஷ்டர்களென்று தாராளமாய்ச்சொல்லலாம். நவீனகால அவிவேகப்பெண்கள் எதற்கும்உதவார். வித்யாவந்தர்களானபுருஷர்கள் இந்த துஷ்ட பிசாசுகளை மணந்துகொள்ளக்கூடாது. ஸதாகாலமும் அலங்காரப்பிரியைகளாய் காசைக்கண்டபடிசெலவழித்து உதவாத ஆபரணாதிகளைப் பூண்டு வேஷதாரிணிகளாய் விளங்குகின்றனர். படித்தஸ்திரீகள் பொறுமையேபூஷணமென்றும்பதியேஸர்வஸ்ரியமென்றும் அந்யரின்தோஷாரோபணைகளைத் தாங்கள் அறுவறுக்க வேண்டுமென்றும் நினைத்து குருதெய்வங்களையும் பெரியோர்களையும் பூஜித்துக் காலங்கழிப்பர். பதியுள்ளவர்கட்கு ஒருகுறைவும்நேரிடாது. பிக்ஷான்னம் புஜித்தாலும் தரித்திரத்தை யடைந்தாலும் கஷ்டம்நேர்ந்தாலும் காசையிழந்தாலும் பதிஜீவிதனாயிருக்கும்போது இவைகளெல்லாம் பதிவிருதைக்குத் திருணஸமானமாகும். ஆரியகுலாங்கனைகள் படித்தாலும் படியாமற்போனாலும் பதிகளிடம் பக்தி விசுவாஸங்கள் வைத்தால் ஸகலமங்களங்களையும் சீக்கிரத்தி லடையலாம். ஆகையால் ஸ்திரீகட்கு பதிபக்தியேபிரதானமென்று பிராரம்பத்தில் எடுத்துரைத்து பிறகு பற்பல விஷயங்களைப் போதிக்கவேண்டும். "மைத்திரேயி பிரம்மவாதினீ" என்னும் வாக்யத்தால் பிருக்தாரண்யர்க்கு யாக்யவல்கியருஷியின் பத்நியான மைத்திரேயி என்பவள் உபநிஷத்துகளை யத்யயனம் செய்வித்தாள். ஸ்திரீகட்கு வேதவித்யாதிகாரம்கூட உண்டென்று மேற்கூறிய வாக்யத்தால் தெரியவருகிறது. தாரை நீதிசாஸ்திர லக்ஷணங்களை யறிந்தவளாதலால் லக்ஷ்மணரைப் பார்த்து வார்த்தைடாடி மனோகரமான வசனங்களால் அவர்கோபத்தைப் போக்கடித்தாள். யமுனி பூர்ணதிலகே என்னும் அரசகன்யை ஸங்கீதசாஸ்திரத்தில் பண்டிதையாயிருந்து பில்ஹணகவியால் ஸாகித்யவித்தையை அப்

யாஸம் செய்தாள். இவர்களெல்லாம் பதிபக்தியில் பிரக்யாதியடைந்தவர்கள். இம்மாதிரி அநேக பதிவிருதைகளின் சரித்திரங்களை எடுத்துரைக்கக்கூடும். நமது தேசஸ்திரீகள் அபிவிருத்தியடைந்து ஸத்கீர்த்தி பெறவேண்டும். இதற்கு வித்யை தான் ஸோபானம். அந்தவித்யையைக்கண்டபடி கற்காமல் ஸத்விஷயங்களைத் தரக்கூடியவாறு அப்யஸித்து உலகத்தில் நற்பெயரெடுப்ப தவசியம். இவைகளெல்லாம் பாலிகைகளுக்கு எளிதில் வரக்கூடியதல்ல. மாதாபிதாக்கள் நல்ல போதகர்களைக்கொண்டு சொல்லிக்கொடுக்கும்படி செய்வது நன்மை. சீக்கிரத்தில் இந்தியாதேசம் ஸத்குல அங்கனைகளால் ஸதா காலமும் தழைக்கவேண்டுமென்று ஸர்வேஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

குடி மராமத்து வேலை செய்வதற்கும் அதற்காக கணக்குகள் வைப்பதற்கும் தெரிந்துகொள்ளவேண்டிய விதங்கள்.

குடி மராம்மத்துவேலை சரியாய் நடத்துவதற்கு மாத்திரமல்ல, ஆனால் நாகதாளி அதிகமாய் பரவும்பொழுதும், பள்ளங்கள் உண்டாகும்போதும் உடனே சரியை எடுத்துக்கொள்வதைப் பார்ப்பதற்கும் கிராம மணியக்காரர்கள் ஜவாப்தாரியாயிருக்கிறார்கள். அவசியமாய் காணப்படும்பக்ஷத்தில், அப்பேர்ப்பட்ட வேலையை செய்ய சம்பந்தப்பட்ட குடிகளுக்கு உத்திரவுசெய்ய வேண்டியதுந்தவிர தன்னுடைய சிப்பந்தியுடன் தானும்அந்தவேலையை மேல் விசாரணை செய்யவேண்டியது. அவனும் கர்ணனும் பட்டாதாரர்களுக்குள், அவசியமானால்,வேலையை பிரித்துக்கொடுப்பதற்கு சகாயம்செய்யவேண்டியது. குடிகள் வேலையைச்செய்ய அசட்டைசெய்தால், அந்தச்சங்கதியை தாசில்தாருக்கு அவன் ரிபோர்டு செய்யவேண்டியதுந்தவிர அதின் நக்கலை ரிவின்யூ இனிஸ் பெக்டருக்கும் அனுப்பவேண்டியது. அந்த நக்கலுடன் செய்யவேண்டியவேலைக்கு ஒருஎஸ்டிமேட்டும் அந்தவேலைக்கு ஜவாப்தாரியான குடிகளுக்கு அந்தச் சிலவைப்பற்றி காட்டும் ஒரு ஸ்டேட்டுமெண்டும் அனுப்பவேண்டியது. அந்த ஸ்டேட்டுமெண்டை கர்ணன் தயார்செய்து மணியக்காரருடன் அவனும் கையெழுத்துச்செய்யவேண்டியது.

2. சில கிராமங்களில் மணியக்காரரைத்தவிர வேறே மேட்டிக்குடி வழக்கத்தையனுசரித்து இந்த வேலையின் சார்ஜியிலிருக்கிறதுண்டு. இந்த ஆசாரமிருக்குமிடங்களில் அதை விர்த்திசெய்யவேண்டியது. நோடீஸ் கொடுப்பதற்கும் வேலைக்கு ஆள்சேர்க்கும் வேலைவகைறாக்களுக்கும் மணியகாரன் அவருக்கு சகாயம்செய்யவேண்டியது. கிராம மணியகார் கவர்ன்மெண்டாருக்கு முக்கியமாய் ஜவாபுதாரியாயிருக்கிறான். மேட்டிக்குடி தன்னுடைய வேலையைச்செய்ய அசட்டைசெய்யும்பொழுது அவன் தானே ரிபோர்டுசெய்யவேண்டியது. ஆனால் அப்பேர்ப்பட்ட மேட்டிக்குடி, குடி மராமத்து வேலைவிஷயங்களில் தாசீல்தாரர்களுக்கு நேராய் எழுதிக்கொளளலாம்.

3. கிராம மணியகாரர்களாவது அல்லது அந்தவேலையின் சார்ஜியிலிருக்கும் இதர மேடி ரயத்தாவது ஒரு நோட்டுபுஸ்தகம் வைக்கவேண்டியது. குடி மராமத்தில் பிரதிதினமும் செய்யப்படும் வேலையையும், ஒவ்வொரு பட்டாதாரால் அனுப்பப்படும் வேலைக்காரர்களின் ஸங்கியையும், அனுப்பத் தப்பிப்போனவர்களுடைய பெயர்களையும், எவ்வளவுமட்டில் தப்பிப்போயிருப்பதையும் காட்டும்படியாய் அந்த நோட்டுப்புஸ்தகத்தில் காணவேண்டியது. தாசீல்

தால்தார் உத்திரவுப்பிரகாரம் இந்த ஆக்டின்கீழ் வசூலாகும் மொத்தங்களை காட்டும்படியான ஒரு பிரத்தியேகமான கணக்கு வைக்கவேண்டியதுந்தவிர தேதிவாரியாய் நடந்தசெலவையும் பாக்கியையும் அதில் காட்டவேண்டியது. அதை தாசில்தார்களும் ரிவினியூ இனிஸ்பெக்டர்களும் வெளியிற்போகும் பொழுது பரிசோதிக்கவேண்டியது.

4. தாசில்தார்களும், ரிவினியூ இனிஸ்பெக்டர்களும், அவர்கள் வெளியில் போகும்பொழூதெல்லாம் ஜலாஸான்களை இனிஸ்பெக்ட்செய்து குடிமராமத்துவேலை நடத்தும் விஷயத்தில் தக்க ஏற்பாடுசெய்யவேண்டியது. இது விஷயத்தில் எவ்வளவுவேலை, எம்மாதிரியான வேலைசெய்ததும் அவர்கள் அவர்களுடைய டயிரிகளில் தப்பாமல் நோட்டுசெய்யவேண்டியது.

5. 1858-ம் ௵த்திய I-வது ஆக்டின் நிபந்தனைகளை உபயோகப்படுத்தவேண்டுமென்று ரிவினியூ இன்ஸ்பெக்டரிடத்திலிருந்தாவது அல்லது கிருமமணியக்காரிடத்திலிருந்தாவது தாசில்தாருக்கு ரிபோர்டு வந்தபொழுது தனக்கு வந்த ரிபோர்ட்டுடன் எஸ்டிமேட்டு வாராதிருந்தால் செய்யவேண்டிய மராமத்துக்கு எஸ்டிமேட்டு அனுப்பும்படி தாசில்தார் கேழ்க்கவேண்டியது. கர்ணமல் தயார்செய்யப்பட்ட ஸடேட்மெண்டில்கண்டவேலையை ஒவ்வொரு பட்டாதாரன் அல்லது அதற்கு சம்பந்தப்பட்ட பட்டாதாரர்கள் செய்யவேண்டியதென்றும் அல்லது ஒரு குறித்த தேதியிலாவது அல்லது அதற்கு முந்தியாவது தேவையான வேலைக்காரர்களை கொடுக்கவேண்டியதென்றும் ஆக்ஞாபித்து கிருமத்தில் தண்டோராமூலமாய் பஹிரங்கப்படுத்த ஒரு நோடீஸ் உடனே பிறப்பிக்கவேண்டியதுந்தவிர அதின் நக்கலை சாவடியில் ஒட்டிவைக்கவேண்டியது. இதுபிரகாரம் நடக்காத பக்ஷத்தில் ஒவ்வொரு பட்டாதாரன் அல்லது பட்டாதாரர்கள் ஸப்ளை செய்யவேண்டிய வேலையின் கிரயத்துக்கு இரண்டத்தனைக்கு மேற்படாத மொத்தத்தை ஆக்டின் 6 வது செக்ஷன் பிரகாரம் எல்லாந் தவரிப்போனவர்களிடத்திலிருந்தும் உடனே வசூல்செய்ய ஏற்பாடுசெய்யவேண்டியது. தாசில்தார் கண்டிராக்ட்டால் அந்தவேலையை நடத்த ஏற்பாடு செய்யவேண்டியதுந்தவிர மேல்கண்டபடி வசூல்செய்யப்பட்ட மொத்தத்திலிருந்து செலுத்தவேண்டியது. தாசில்தார் மைனர் இரிகேஷன் டிபார்டுமெண்டாரால் அந்த வேலையைச் செய்யவேண்டியிருந்தால் 1905-ம் ௵ மே ௴ 12௳ யுள்ள 124 நெ. போர்டு புரோசீடிங்குவில் (Land Records, &c.) கண்ட ஏற்பாட்டின்படி நடத்தப்படவேண்டியது.

6. இந்த விதிகளின்படி வசூலானபணத்தின் மீதியை உபயோகப்படுத்துவதைப்பற்றி போர்டு ஸ்டாண்டிங்கு ஆர்டர் நெ. 86, பாரா 5, நிபந்தனைகளின்படி நடந்துக்கொள்ளவேண்டியது.

7. கிராம மணியகாரன் தன்னுடைய கிருமத்தில் நடந்த குடிமராமத்து வேலைக்காக அடியிற்கண்ட பாரத்தில் ஒரு மாசாந்திர ஸ்டேட்மெண்டு ரிவினியூ இனிஸ்பெக்டருக்கு அனுப்பும்மாசாந்திர சாகுபடி கணக்குகளுடன் அனுப்பவேண்டியது. அவர் அவைகளை அவர் சேர்த்து அனுப்பும் மாசாந்திர சாகுபடி கணக்குகளுடன் தாலூக்கா ஆபீசுக்கு அப்படியேஒரிஜினலாய் அனுப்பவேண்டியது. இந்த எண்களை தாலூகா ஆபீசில் அதேபாரத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில்கிருமவாரியாய் தாக்கல்செய்யவேண்டியது. இதிலிருந்துதான் வருஷாந்திர குடிமராமத்து ஸ்டேட்டுமெண்டு போர்டுக்கு அனுப்புவதற்காக கலெக்டராபீசுக்கு அனுப்பப்படவேண்டியது.

கிராமம்.	நடக்கிறவேலையின் சுமார் மதிப்பு.	ஷ கிஸ்தின் 6-வ தேதிக்கு முன்பு செலவழிக்கப்பட்ட மொத்தம்.	ஷ கிஸ்தின் 2-வ தேதிக்கு முன்பு செலவான மொத்தம்.	சுதாவாய்கொடுத்த கண்டிராக்டின் மொத்தம்.		ஷரா.
				வேலையாக.	பணமாக.	
1	2	3	4	5	6	7
1. ஊத்துக்கால்வாய்.						
2. ஏரி (பெரியஏரி).						
3. வரவு கால்வாய்.						
மொத்தம்.						

குறிப்பு.—தாலூக்கா ஆபீஸில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்டுமெண்டின் மொத்தம்மாத்திரம் தாக்கல் செய்யவேண்டியது.

விளம்பரம்.

1906ஞு நவம்பர்மீ 13உ யுள்ள (R. S. L. R. & Agri.) 427 நெ. போர்டாருடைய புரோசிடிங்சை யனுசரித்து எல்லாருக்கும் தெரிவிக்கிறதென்னவென்றால், வியாதியில் அவஸ்தைப்படும் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்வதற்கும் கால்நடைவியாதி வியாபிப்பதைநிறுத்துவதற்கும் வேலூரில் கால்நடை வைத்தியசாலை ஒன்று சீக்கிரத்தில் வைக்கப்படும். ஷ வைத்தியசாலை ஒரு வெடிரினெரி அஸிஸ்ட்டாண்டு சார்ஜியிலிருக்கும். அவர் கால்நடை சொந்தக்காரர்களுக்கு அம்மைகுத்துவதினும் வேறுவிதத்தினும் தடைசெயவதற்கு பரிகாரம்சொல்லவும் அடிக்கடி உண்டாகும் கோமாரிமுதலான கால்நடைவியாதிகளுக்கு வயித்தியமும் செய்வார். அப்பேர்ப்பட்டவியாதிகள் ஆரம்பிக்கும்பக்ஷத்தில் உடனே வெடிரினெரி அஸிஸ்டாண்டுக்கு தெரிவிக்கவும். அவருடைய வேலைக்காக வேண்டிய எல்லா ஒத்தாசையும் செய்யவேண்டியதாயும் தாலூக்கா உத்தியோகஸ்தர்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் அவர்சொல்லுகிறதை முற்றிலும் கவனிக்கவேண்டியதுந்தவிர கூடியவரையில் அந்தப்படிசெய்யவும் வேண்டியது.

1907ஞுத்திய சர்க்யூலர் ந. 1.

1907ஞு ஜனவரிமீ 11உ யுள்ள 1907ஞுத்திய R. Dis. ந. 51 ரிவினியூ.

ஒருபோக நஞ்சைப்பயிர் நிலத்தில் ஷ பயிர் நடுவதற்கு உடன் முன்னுவது அதன் மகசூல் அறுவடையான உடன் பின்னுவது, நில எருவுக்காகவும் கால் நடைகளின் தீனிக்காகவும் உபயோகிக்கக்கூடிய பயிர்தின் சர்க்கார் ஜலத்தைக்கொண்டு அபிவிருத்திசெய்தால் அதற்கு தண்ணீர்தீர்வை மாப்புசெய்திருப்பதாக, செட்டில்மெண்டு போர்டாரவர்களுடைய 1906ஞு நவம்பர்மீ 28உ யுள்ள ந. 446 புரொசிடிங்ஸ் மூலமாய், கவர்ன்மெண்டார் அவர்கள் 1906ஞு

அக்டோபர்௴ 1௳யுள்ள ந. 971 ரிவினியூ உத்திரவினாலும், 1906௵ நவம்பர்௴ 17௳யுள்ள ந. 1146 ரிவினியூ உத்திரவினாலும், அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் அந்த பயிர்களின் விதைகள் முற்றுவதற்குமுந்தி அந்தப்பயிர்களை உழுதுவிடவாவது அறுத்துவிடவாவது மேய்த்துவிடவாவது வேண்டியது. மேலும், கவர்ன்மெண்டாரவர்களுடைய மேற்சொல்லிய அனுமதியானது சர்க்காருக்கு கிடைக்கக்கூடிய இரண்டாம்போக தீர்வைக்கு பாதகமாக அனுஷ்டானத்தில் ஏற்படும் பட்சத்தில் அந்த அனுமதியை ரத்துசெய்யப்படும்.

1907௵த்திய சர்க்யூலர். ந. 3.

1907௵ மார்ச்சு௴ 17௳யுள்ள 1907௵த்திய ஆர். டிஸ். ந. 326 ரிவினியூ.

பீல்டு மாப்புக்கு டூப்ளிகேட்டுகள் தயார்செய்யவேண்டியதில்லையென்று தீர்மானமாயிருக்கிறபடியால் 1906௵ செப்டம்பர்௴ 26௳யுள்ள இந்த ஆபீஸ் 1906௵ ஆர். டிஸ். 924-ரிவினியூ நம்பருள்ள சர்க்கியூலரின் 16-வது பாராவானது இதனால் ரத்துசெய்யப்பட்டது.

2. இப்போதுள்ள பீல்டு ஸ்கெச்சுகள் முடிந்தவுடன் சர்வே ஆபீசுக்கு குப்பல்குப்பலாக அனுப்பப்படும். அவ்விடத்தில் அவைகள் அச்சிடப்பட்டு அந்த ஆபீசிலிருந்து 5 பிரதிகள் அனுப்பப்படும். அவைகளில் இரண்டில் ஒன்று கர்ணனிடத்திலும் மற்றொன்று தாலூகா ஆபீசிலும் இருக்கவேண்டியது. பாக்கி மூன்றும் விலைக்காக தாலூகா ஆபீசில் வைத்துவைக்கப்படும். கையெழுத்திலுள்ள அசல்வேண்டும்போது பார்த்துக்கொள்ளவேண்டியதற்காக அச்சிடப்பட்டபிறகு தாலூகா ஆபீசுக்கு திரும்ப அனுப்பப்படவேண்டியது.

விளம்பரம்.

1907௵ ஏப்பிரல்௴ 10௳யுள்ள 1907௵த்திய ஆர். டிஸ். ந. 423-ரி.

இரண்டாம்போக சாகுபடிகாலத்தில் ரிஜிஸ்தரான ஒருபோக நஞ்சைப் பயிர் நிலத்தில் நஞ்சைப்பயிர் விளைவிப்பதைப்பற்றி போர்டார் அவர்களுடைய 1604௵ ஜெனவரி௴ 8௳யுள்ள 8-ந. தீர்மானத்தை செட்டில்மெண்டு போர்டார் அவர்களுடைய 1906௵ நவம்பர்௴ 16௳யுள்ள நம்பர் 438 புரோசீடிங்ஸ் மூலமாய், கவர்ன்மெண்டார் அவர்கள் 1906௵ அக்டோபர்௴ 18௳யுள்ள நம்பர் 1,040-ரெவினியூ உத்திரவில் அங்கீகரிக்காததால் 1904௵ டிசம்பர்௴ 1௳யுள்ளவும் ஆகஸ்ட்டு௴ 1௳யுள்ளவும் டிஸ்டிரிக்ட்டு கெஜட்டுசப்ளிமெண்டுகளில் கலெக்டர் அவர்களுடைய ஸ்டாண்டிங் சர்க்குலரிலும் வில்லேஜ் ஷீட்டிலும் 1904௵த்திய 7-நம்பராகவும் 11-நம்பராகவும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற 1904௵ அக்டோபர்௴ 8௳யுள்ள R. Dis. 989-ரெவினியூ நம்பருள்ளதும் 1904௵ ஜூலை௴ 15௳யுள்ள 1904௵த்திய R. C. 2,534-G. R. நம்பருள்ளதுமான இந்த ஆபீஸ் சர்க்குலர்கள் இதனால் ரத்து செய்யப்பட்டன.

2. ஒருபோக நஞ்சை நிலமாக ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட நிலத்திற்குடையவர்கள் சாகுபடி வருஷத்தில் எந்தக்காலத்தில் வேணுமானாலும் ஒருபோக பயிர் செய்துகொள்ளலாம்.

வில்லேஜ் ஆபீசருடைய ஷீட்டு.

ஒட்டுத்திரவு.

உப்புத்தீர்வையை இந்தியாகவர்ன்மெண்டாரவர்கள் மணங்குஒன்றுக்கு ஓருரூபாய்க்குக்குறைத்திருப்பதைவெளிப்படுத்தும் விளம்பரம் எல்லாகிராமாதிகாரிகளுக்கும் அனுப்படும். அதை அவர்கள் கிராமச்சாவடிகளில் எல்லாருக்கும்

தெரியும்படியாய் பகிரங்கமான இடங்களில் ஒட்டிவைப்பதுந்தவிர தண்டோரா மூலமாயும் பிரசித்தஞ் செய்யவேண்டியது.

விளம்பரம்.

1907௵ மார்ச்சு௴ 20௳ துடங்கி உப்புத்தீர்வையை மணங்கு ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் குறைத்திருக்கிறார்களென்பதை இதின் மூலமாய் எல்லாருக்கும் அறிவிக்கப்படுகிறது.

கலெக்டராவர்களுடைய நிலையான விளம்பரங்கள்.

மதுரை, மேலூர் தாலூகா கிராமங்களின் குடிகளுக்கு இதனாலறிவிக்கிற தென்னவென்றால்:—பெரியார் தண்ணீர்வருவதையுத்தேசித்து புஞ்சையை நஞ்சையாக திருத்துவதற்காகவும் தரிசு வகையரு நிலங்களை வெட்டி பைங்காலாக்குவதற்காகவும் கடன் கொடுப்பதற்காக கெவர்ன்மெண்டார், வேண்டியதுகையைசாங்கிஷன் செய்திருக்கிறார்கள். லாண்டுஇம்புருவ்மெண்டு ஆக்ட், 1883௵த்திய 19-வது ஆக்டின் 10-வது பிரிவின்படி பிரப்பிவிக்கபட்டிருக்கிற சாதாரண விதிகளின் பிரகாரம் கடன்கொடுக்கப்படும். அதில்முக்கியமாய் தெரியவேண்டிய விதிகளை கீழேகண்டிருக்கிறது.

2. இந்தியா கெவர்ன்மெண்டாரவர்களுக்கு எழுதயிருக்கிற சாங்ஷனை எதிர்பார்த்து அப்போர்ப்பட்ட கடனது, குறைந்து 20ரூ. முதல்தேவையானமட்டும் கேட்கலாம். ஆனால் ஈடுகாட்டும் சொத்தின்கிரயம் கேட்கும் கடனைவிட கால்வாசி ஜாஸ்தியாகவிருக்கவேண்டும்.

3. வட்டி ௵ 1க்கு 100-க்கு 5 அல்லது ரூ. 100-க்கு மாதம் 1-க்கு அணா 6 பைசு 8.

4. ரூ. 500க்கு குறைந்தகடன்தொகைகள்ரூல்களை அனுசரித்து, 10௵த்துக்குள்ளாவது இஷ்டமிருந்தால் அதற்கும்குறைந்த காலத்துக்குள்ளாவது செலுத்தப்படலாம்.

5. எல்லாவிண்ணப்பங்களும் அச்சுப்பாரத்தில் பெரியார் ஸ்பெஷல் டிப்டி கலெக்டராவர்களிடம் கொடுக்கப்படவேண்டும். மேற்படி பாரங்களை தாலூகா ஆபீசுகளிலும் ரெவினியூ இனிஸ்பெக்டராவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

20 ரூபாய்க்கு மேல்பட்ட தொகைகளுக்குஸ்டாம்பு ரசீதுகள் கொடுக்கப்படவேண்டியதென்று கண்டிருக்கிற ஸ்டாம்பு ஆக்ட்டின் நிபந்தனையை எல்லாரும் கவனிக்கவேண்டும்.

அப்படிக்கு செயயத்தவறும் குற்றவாளிகள் பிராசிகூஷன் செய்யப்பட்டு 1899௵த்திய 2-வது ஆக்டின் 65-வது பிரிவில்கண்ட தண்டனைக்குள்படுவார்கள்.

ஒட்டுத்திரவு.

ரோட்டு சாலைமரங்கள் களவு போகப்பட்ட அநேககேசுகளும் இந்த சாலைகளுக்கும் லோகல்பண்டுசொத்தாகிய வாராவதி முதலியவற்றிற்கும் கெடுதல் செய்யப்பட்ட கேசுகளும், இவைகள் நேரிடும்கிராமங்களிட கிராம உத்தியோகஸ்தருடைய அஜாக்கிரதையினால் கண்டுபிடிக்கப்படாமல் போகிறதாய் கலெக்டர் துரை அவர்கள் நோடீசுக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

2. கிராம உத்தியோகஸ்தர்கள் அவாளிருக்கும் கிராமத்திலிருந்து அவாளிடமிருக்கிற தலையாரி வெட்டியான்களிட சகாயத்துடனும் பிரஸ்தாப விஷயத்தில் அவாள் சிரத்தை எடுத்துக்கொள்ளும் பட்சத்தில் இவ்விதமான

கேசுகளை கண்டுபிடித்தும் தாலூகா லோக்கல்பண்டு ஓவர்சியருக்கு அவைகளைப் பற்றிநடவடிக்கை நடத்தும்பொருட்டு உடனே ரிபோர்ட்டு செய்தும் மேல்கண்ட களவுகளையும் நஷ்டங்களையும் நேரிடாமலிருக்கும்படி சுலபமாய் தடுக்கலாமென்று கலெக்டர் துரையவர்கள் நம்புகிறார்.

3. ரோட்டுகளோரமிருக்கும் கிராமங்களிட எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும்அவாளவாளிட கிராமங்களின்சரஹத்துக்குள் எதாவதுலோக்கல்பண்டு சொத்து களவுபோனாலும் அவைகளுக்கு நஷ்டமுண்டானாலும், அவர்களையே ஜவாப்தாரியாக்கப்படுமெண்டும் இது விஷயத்தில் எதாவது அசிரத்தையாயிருந்தால் கடினமாய் தண்டிக்கப்படுவார்களென்றும் இதனால் அவர்களை எச்சரிக்கைசெய்யப்படுகிறது. தாசில்தார்களும் டிப்டிதாசில்தார்களும் அவர்கள் வெளியில் போகும்போது கிராம நவுக்கர்கள் இந்த உத்திரவை சரியாய் கவனிக்கிறார்கள் என்பதை பார்ப்பதுமல்லாமல் அவாள் எதாவது அசிரத்தையாயிருந்தால் அதைபற்றி டிவிஷனல் ஆபீசர் அவர்களுக்கு தண்டனைக்காக ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

ஒரு கவர்ன்மெண்டு ஆர்டர்.

நத்தம் புறம்போக்கு, ரோட் புறம்போக்கு இந்தஸ்தலங்களில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு பொது நன்மைக்குத்தேவையில்லாமலிருந்தால் ஸ்தலத்தை அயனுக்கு மாற்றி ஆக்கிரமிப்புதாருக்குப் பட்டா செய்து கொடுக்க வேணுமென்றும், அப்படிப் பொது நன்மைக்குத் தேவையிருந்து மேற்படி ஸ்தலங்களில் ஆக்கிரமித்திருந்தால் அவைகள் என்கிரோச்மெண்ட் ஆக்ட் பிரகாரம் நடவடிக்கை நடத்தப்பட வேண்டியதென்றும், டவுன் என்று வகுக்கப்பட்டிருக்கிற கிராமங்களில். ரோட் புறம்போக்கில் ஆக்கிரமணம் ஏற்பட்டால் தனிமையாகப் பட்டிகொடுத்து ஸ்டாண்டிங்ஆர்டர் 15 (20) பிரகாரம் நடவடிக்கை நடத்த சிபார்சு செய்யவேண்டியதென்றும், யூனியனைத் தவிர மற்ற கிராமங்களிலிருக்கும் ஆக்கிரமிப்புகளை மேலான அதிகாரிகளின் நோடீசுக்குக் கொண்டுவரவேண்டியது ரிவினியு இன்ஸ்பெக்டர் கிராம உத்தியோகஸ்தர் இவர்களின் கடமையென்றும், கவர்ன்மெண்டாரவர்களுடைய 2-2-07 தேதியுள்ள 1462 நெ. உத்திரவு ரிவினியு உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறதாகவும் தெரிகிறது. இதுவரையில் நத்தம் புறம்போக்கு என்று அளக்கப்பட்ட ஸ்தலங்களை மிராசுதாரர்களுக்கு "எவ்வளவுபாத்தியங்களிருந்தபோதிலும்" பட்டாவுக்குக் கொடுக்கக்கூடாதென்று ரிவினியு உத்தியோகஸ்தர்கள் ஒரே பிடிவாதமாயிருந்து வந்தார்கள். அந்தப் பிடிவாதத்தை கவர்ன்மெண்டார் இந்த உத்திரவால் மாற்றப்பிரியப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நோக்கம் நன்னோக்கந்தான், ஆனால் இந்த உத்திரவால் மிராசுதாரர்களுக்குப் போதுமானசௌகரியமும், நியாயமும் கிடைக்குமென்று தோன்றவில்லை. ஆட்சேபனையின்றிக் கர்ணன்களுக்கும், ரிவினியு இன்ஸ்பெக்டர்களுக்கும் ஏற்கெனவே கொடுத்திருக்கும் அதிகாரங்கள் இந்த உத்திரவால் இன்னும் ஒருவழியில் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது. பட்டா செய்து கொடுப்பதும், என்கிரோச்மெண்டு ஆக்டுப்படி மிராசுதார்களைத் துன்பப்படுத்துவதும் இவர்களைப் பொருத்திருக்கிறது. இப்படியாக மிராசுதார்களை ரிவினியு இன்ஸ்பெகடர் முதலிய கீழ் உத்தியோகஸ்தர்களின்

தயவை சம்பாதிக்க வேண்டியவர்களாக விட்டிராமல், இன்னவிதமான ஸ்தலங்கள் பொது நன்மைக்குத் தேவையுள்ளவைகளாகக் கருதப்படவேண்டும், இன்னவிதமான ஸ்தலங்கள் பொது நன்மைக்குத்தேவையில்லாதவைகளாகக் கருதப்படவேண்டுமென்று விதித்திருந்தார்களேயானால் எவ்வளவோ சௌகரியமாக விருக்கும்.

இவ்வித உத்திரவு செய்ததற்காவது ஏழை மிராசுதார்கள் நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்களுக்குத் தங்களுடைய நன்றியறிதலை செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்னமும் ஏமார்ந்து போகாமல் ஜாக்கிரதையாய் இருங்கள்.

நமது வங்காள சகோதரர்கள் மாட்டுற்பவித்து நாளடைவில் நாடெங்கு பரவிவரும் "சுவதேசியம்" என்னும் இரதமானது, சுவதேச மாதாவின் சற்பத்தி லுற்பவித்த முதருந்தி அவளினின்னருளால் நாளொரு வண்ணம் பொழுதொருமேனியா யபிவிர்த்தியடைந்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு தக்க அந்தஸ்தும் அருமையும் வாய்ந்த கனம் தாதாபாய் நௌரோஜி வகையரா பாதகண்ட மாக்களால் ஒற்றையாழிய னிரதம்போன்று எவ்வித இடையூறுமின்றிச் செலுத்தப்பட்டு வருவதைக் கண்ட பரதேசியிலநேகர் பொய்ச் சாப்பற்று, ...ற்கிடுக்கண் விளைக்கச்சன்னதங்கொண்டு, சுவதேசிய முயற்சி நிலைபெறு...தென்றும், பாதகண்டத்தாரெடுத்த காரியத்தைச் சாதிக்குமியல் பினால்ல...வென்றும் தத்தம் பத்திரிகை வாயிலாய் வெளியிடுவதோடு, பம்பாய் சென்னை மாகாணங்களின் பிரதான நகரொவ்வொன்றிலும் சொல் வன்மையும் ...தலைமையும் வாய்ந்த சிலரைத் தங்கள் வசமாக்கி, இந்நாளொங்கு முற்பத்தியாகிக்கொண்டிருக்கும் "சுவதேசியம்" என்ற புதுக்கிளர்ச்சியில் அவர்கள் தலையிடா திருப்பின், அரியபல வுன்னத பதவிகளளிப்பதாய் "பச்சைக்குழந்தைக்கு வாழைப்பழங்காட்டியவாறு" வாக்குறுதி செயவதற்கிசைய அத்தலைவர்களில் சிற்சிலர், ஆலைவாய்க்கரும்புபோல் சிக்குண்டுழங்கின்றனர். அப்பரதேசியர் பலரும் வெற்றுப் பகட்டுரையை நம்பித தம்மினத்தவரும் நாட்டவருமாகிய பலகோடி ஜனங்களின் பாதவிப்புக்கும் வசைச் சொல்லுக்கும் ஆளாவதில் அத்தலைவர்களடையும் பயன்றா னென்னே! தற்காலம் அத்தலைவர்கள் வசித்துவரும் கௌரவ அங்கத்திற்கும்பிரஜாகோடிகளின் நன்மதிப்புக்கு மதிகமெனவெதிர் பார்க்கும் பதவிக ளொத்தகையதேயாயினும் "அதமம் சேவகா விருத்தி" என்ற ஆன்றோருரைக்கும் எந்நியாயஞ் செலுத்திடினும் ஒருதரப்பாருக்குச் சாதகமும் மறுதரப்பாருக்குப் பாதகமுமாகிய அசம்பாவிதத்துக்கும் ஆளாக வேண்டுமென்றோ. தற்காலம் மஹோன்னத நீதியம் பதவிவகித்து வரும் நம் சுதேச மாதாவினரும் பெரும் புத்திராகிய ஆனரபில் ஜஸ்டிஸ் ஸ்ரீ. **யஸ். சுப்பிரமண்ய அய்யர்** அவர்கள் போன்ற மேதாவிகள் தங்கள் அதிகார பதவிகளையுங் கவனியாது தேசோபகாரத்துக்கும் நியாயத்துக்கும் சத்தியத்துக்கும் பாடுபட்டு வருவதையும் **கனம் தாதாபாய் நௌரோஜியவர்கள்** சுவதேசமாதாவின் புத்திராகிய சகலரும், அடிமைத்தன்மை (Slavery) நீங்கி "சுவராஜ்யம்" என்னும் ஆபரணத்தை யணியமுன் வரவேண்டு மென்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதையும் அத்தலைவர்கள் மறந்தனர் போலும். அன்றேல் நாம் சுவதேச மாதா மீது மீளாவன்பு

கூர்ந்துழைத்துவந்த பம்பாய் சென்னை மாகாணப் பிரமுகர்களில் சிலர், தற்போது அச்"சுவதேசியம்" விஷயத்துக்கு முற்றிலும் மாறுதலான அபிப்பிராயங்கொண்டு சமீபத்தில் நடந்த காங்கிரஸ் (Congress) மஹாசபையென்ன, தஞ்சை மாகாணசபை (Tanjore Provincial Conference) என்ன, இவைகளில் அந்நியநாட்டுச் சரக்குவிலக்கு (Boycott of foreign goods) வங்காள மாகாணத்தாருக்குமட்டுமுரியதேயொழிய பம்பாய் சென்னை மாகாணத்தார் அனுசரிக்கத் தக்கதல்லவென வற்புறுத்த முன்வந்திரார். ஆயினும் அவர்கள் ஜெபஞ் சாயாத[illegible] காலமகிழத் தக்கதேயாயினும் நம் நாட்டுப்பிரமுகர்கள் இன்னமும் அப்பரதேசியரின் வெற்றுப்பகட்டுரையை நம்பிவாழவெண்ணுவது அவர்கள் [illegible] கழகன்று. நாம் ஏமாறும்படி இனிய ஆசை வார்த்தைகளைச்சொல்லி இதுகாறும் நம்மைக் கைவசப்படுத்தவந்தனரேயன்றி யாவர்க்கும் செப்புதலெளிது. "செப்பியவண்ணம் செய்தலரிது" என்றபிரகாரம் வாயினுற் கூறியவைகளை நிறைவேற்ற அப்பரதேசியர் முன்வரவில்லையென்பதும் நாம் நன்கறிந்தவிஷயமே. ஆகையால் சகோதரர்களே! இன்னமும் அவர்களின் பகட்டு வார்த்தைகளை நம்பிப் பலகோடி ஜனங்களி[illegible]த்திற்கிடர் செய்யாதிருங்கள். நம்சுவதேசிய மாதா சுகமடையும் நற்காலம் சமீபித்திருக்கின்றது. ராஜதந்திர நிபுணர்கள் ஸ்வராஜ்யத்தை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்றனர். ஆகையால் மித்திர[illegible]ளே! இன்னமும்பரதேசியரின் மாயவலையில் சிக்குண்டு தடுமாறுதிருமின்.

NOTES AND MISCELLANEOUS.

ஜனங்களே, நீங்கள்தான் இந்த பூமிக்குச் சொந்தக்காரர்கள். அரசாட்சியார் உங்களிடம் சம்பளம்வாங்கிக்கொண்டு உங்களுக்குவேலைசெ[illegible]யும் தொழும்பர்கள். ஒரு அரசாட்சியார் சரியானபடி வேலைபார்க்கா[illegible]ால் அதை மாற்றும் சக்தி உங்களுக்கு உண்டு. உங்களுடைய சுதந்திரங்களையும், உரிமைகளையும் அறிந்துகொண்டு நீங்கள் செய்யும் சட்டத்திற் கிணங்கிய காரியங்களிலே தலையிடுவோர்களைச் சிறிதேனும் தாக்ஷண்ணியமின்றி எவ்விதங்களாலும் அடக்கிவிடுங்கள். மனத்துணிவுடையவர்களிடம் போலீஸாரின் குறும்பு செல்லமாட்டாது. மனத்துணிவுடையவர்களைப் பிசாசுகூட அணுகாது.

ஸர் ஜார்ஜ் அர்பத்நட்.

இவர் கேஸ் நடந்துகொண்டிருக்குமிடையிலேயே இங்கிலந்துக்கு ஓடிப்போய்விடமாட்டாரென்றும் இவரை ஜெயிலிலே போடாதிருக்கும் பக்ஷத்தில் எவ்வளவு வேண்டுமென்றாலும் ஜாமீன்கட்ட தயாராயிருப்பதாகவும் அவருடைய பக்ஷத்து வக்கீல்கள் சொல்லிப்பார்த்துங்கூட பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் கிளார்கும், ஹைகோர்ட்டிலே ஸர் எஸ். சுப்பிரமண்ணிய அய்யரும் அவரை ஜாமீனில் விடமுடியாதென்று சொன்னதினால் ஸர் ஜார்ஜ் அர்பத்நட் சிறைக்கூடத்திலேயிருக்கிறார். இவரை தண்டித்து என்னபிரயோஜனம்? இவருடைய ஏமாற்றுக்கள் உலகத்திற்செல்லாம் தெரிந்தபிற்பாடுங்கூட இன்னும் ஐரோப்பிய வர்த்தகர்களுடன் உறவு கொண்டாடிக்கொண்டிருக்கும் நம்மவர்களையல்லவோ தண்டனை செய்யவேண்டும்?

—ஜீலுதேசத்தில் சந்திரன் பிரகாசிப்பதைப்போல எங்கும் பிரகாசிப்பதில்லையாம். அத்தேசத்தில் பிரகாசிக்கும்போது 7-மயில் தூரத்திலுள்ள வஸ்துக்கள் நன்றாய்ப்புலப்படுமாம். சந்திரன் பிரகாசிக்காத காலத்தில் நட்சத்திரத்

தின் ஒளியால் புஸ்தகங்களை படிக்கலாமாம். அத்தேசத்தில் கம்பெனி லாந்தர்கள் வீதியில் வேண்டியதில்லைபோலும்.

—நாகப்பட்டணத்தில் நாடகம் நடத்திவருகிற ஆலந்தூர் கம்பெனியின் இராஜபார்ட்டுக்காரர் ஒருவரும் ஸ்திரீ பார்ட்டுக்காரர் ஒருவரும் பயிரங்கமேடையில் பி-கோ 297-வது பிரிவுப்படிக்குள்ள குற்றத்தைச்செய்ததாய் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டரால் சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறது.

—சுதேசியபெருக்கு மிகுந்திருக்கு மிச்சமயத்தில் அதனை செவ்வையாக வேரூன்றும்படி செய்வதே ஜன்மதேசத்துதித்த பூமான்களின் செயலென்பதை நன்குணர்ந்த பரோடா சமஸ்தானத்து **கேய்க்வாரவர்கள்** 50,000 ரூபாய் தம் தலைநகரில் ஸ்தாபிக்கப்படுமொரு குடைசெய்யுஞ் சாலைக்கு நன்கொடையளித்திருப்பதாய் வாக்களித்திருக்கிறாராம்.

—அமெரிக்கா தேசத்தில் ஆகர்ஷண வித்தையிற் பயிற்சியுடைய ஒருவன் ஒவ்வொருத்தியாய் நூறுபெண்களைக் கலியாண முடித்து அவர்கள் கைவசமுள்ள காசுபணங்களை யபகரித்துக்கொண்டு இதேதொழிலாக வேறுபெண் தேடிதிரியும்போது நியூயார்க் நகரத்தில் அகப்பட்டிருக்கின்றானாம்.

—வெந்நீர்ஸ்நானம் இராத்திரிகாலத்திலே செய்தால் மிகச்சுகத்தைத்தரும், அப்படியல்லாமல் வெந்நீரில் மூழ்கி காற்றடிக்கும் வெளியிடங்களுக்குச் செல்லுதல் கூடாது. வெந்நீரில் உஷ்ணம் அதிகம் இருத்தல் கூடாது. சாப்பிட்டவுடன் வெந்நீரிலே ஸ்நானம் செய்யக்கூடாது. அப்படிச்செய்வதானால் சாப்பிட்டு ஒரு மணி நேரம் கழித்துத்தான் செய்யவேண்டும்.

பாட்டிவாலாவின்

மருந்துகளும், மாத்திரைகளும்.

மலை ஜ[illegible]த்துக்கும் அஜீரணத்தினால் உண்டாகும் ஜுவரத்துக்கும் தக்கமருந்து.

ஸர் மாஜ்ஜெக்கர்:—அது நம்பத்தக்க நல்ல மருந்து. ஸர்ஜன் மேஜர் ரிபோர்ட்டர்:—நான் அதை நிரம்ப நல்லமருந்தென்றே கொண்டிருக்கிறேன். J. Y. லாங்கு (Deputy Grand Master of all Scottish Freemasonry in India):—இதை உபயோகம் செய்தமாத்திரத்தில் சௌக்கியம்செய்யத்தக்கது. (Very Rev.)பி. பெர்மாண்டு விக்ரர் பிளாரா:—இது நிரம்ப நல்லது. ஜி.கிவிட்டி (Lic of Giv. Eng.):—அவை உபயோகிப்பதால் அதில் குணமிருக்கிறது. கிரீஸ் கிராஸ் C. Contractor (Insine works):—அது எமக்கு உபயோகித்தலும் குணமுண்டாகிறது. R. கிரிஸ்லி (Incharge Tunnes Cas):—அதைப்பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயமுண்டு. அ[illegible]மான குணத்தைக் கொடுக்கத்தக்கது. P. J. டெயிலி(Chief Guard, S. M. Railway):—இறக்கும் மனிதனுக்கு இது நல்ல மருந்து. பிழைக்கும்படி செய்யும்படியான அவ்வளவு நல்ல மருந்து. புட்டிகளில் அடைக்கப்பட்டு வருகிறது.

Dr. H. L. BATIWALA,
Warli Dispensary Dadar,
BOMBAY.

இன்னும் இதர மருந்துவியாபாரிகளண்டையும் கிடைக்கும்.
விலையில் வியாபாரிகளுக்குக் குறைத்துக் கொடுக்கப்படும்.

ஹனுமான் அண்டு கம்பெனி,

வியாபாரிகள், கமீஷன் ஏஜெண்டுகள்.

அசல் தங்கநகைகள், மாயமானவைகளல்ல. இதர வியாபாரிகளால் இவைகள் அதிகவிலைக்கு விற்கப்படுகின்றன. வெகு அழகாயும் மேலான வேலைப்பாடாகவும் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டும் செய்யப்படுகின்றன. ஒரு தடவை வாங்கிப்பார்த்தால் வேறே இடங்களில் வாங்கிமோசம் போகமாட்டீர்கள். வெள்ளைக்கல் மூக்குத்தி (வைரத்தைத்தோற்கடிக்கும்) ரூ. 3-0-0; புஷ்பாராகமூக்குத்தி ரூ. 4-0-0; வெள்ளைக்கல் புலாக்கு (ரவையைத்தோற்கடிக்கும்) ரூ. 7-0-0; வெள்ளைக்கல் கடுக்கன் (நல்லவேலைப்பாடுள்ளது) ரூ. 7-0-0. இன்னும் இதரமான நகைகள் வேண்டியிருந்தால் உத்திரவின் (ஆர்டரின்) பேரில் செய்தனுப்பப்படும்.

கன்னடியன் கோல்ட் என்னும் தங்கநகைகளும் ஜர்மன் வெள்ளி நகைகளும்:—இவைகள் எலக்டிரிக்தங்கநகைகளைப்போலல்ல; எண்ணைப்பட்டாலும் ஜலம்பட்டாலும் அதனுடைய பளபளப்புமாறுகிறதில்லை. அநேகர் வெளியிடங்களில் வாங்கி மோசம் போயிருக்கலாம். இந்தக்கம்பெனியின் நகைகள் அவற்றைப்போலல்ல. தங்கக்கம்மல் பெரிது ஜதை 1-க்கு ரூ. 7-0-0, சிறியது ரூ. 5-0-0; தங்கசாமந்திப்பூ ரூ. 3-0-0, சிறியதுரூ. 2-8-0; புலாக்கு (அழகானது, பார்ப்பவர்கள் ரூ. 30-0-0 மதிப்பார்கள்) ரூ. 4-0-0; சரட்டு அட்டிகை (நாணயமும் அழகுமானது) ரூ. 8-0-0; பவழமாலை (சொக்கபவழங்களைப்போலவே காந்திமுதலிய நிறமுள்ளது, என்றென்றைக்கு மாறாதது, மதுரைக்கம்பியினால் 36-பவழங்கள் கட்டப்பட்டது) ரூ. 6-0-0; தங்கக்கைகாப்பு (நல்ல ஸவரனைத்தோற்கடிக்கும், உத்தரவாதம் கொடுக்கப்படும்) 1-ஜதை பெரிது ரூ. 4-0-0, சிறியது ரூ. 3-0-0; தங்கமுகப்புவைத்த பம்பாய்பச்சைவளையல் ஜதை 1-க்கு ரூ. 3-8-0; ஒட்டியாணம் சலங்கையுடன் ரூ. 7-0-0, சிறியது ரூ. 6-8-0; தங்கக்கைகொலுஸ பெரிது ரூ. 4-0-0, சிறிது ரூ. 3-0-0; வேலங்காய் கொலுசு ரூ. 5-0-0, சிறியது 4-0-0; அரிநெல்லிக்காய் கொலுசுபெரிது ரூ. 6-0-0, சிறியது 5-0-0; புதுச்சேரி கொலுசுபெரிதுரூ. 6-0-0, சிறியதுரூ. 5-0-0; ஸ்திரீகள் காலில்போட்டுக்கொள்ளும் கும்பகோணமோஸ்தர் [illegible] பெரிது ரூ. 4-0-0; சிறியதுரூ. 3-8-0, பாடகம்ரூ. 3-12-0, நடுத்தரம்ஜதை ரூ. 3-8-0; பட்டை கொலுசு 7-0-0; டம்ளர் 1-க்கு ரூ. 2-8-0; மதுரைச்சொம்பு ரூ. 3-0-0; பன்னீர்சொம்பு 1-க்கு ரூ. 2-8-0; தட்டு (அழகான வேலைப்பாடுள்ளது) 1-க்கு ரூ. 3-0-0; சந்தனக்கிண்ணம் 1-க்குரூ. 2-12-0—ஒரேதடவையில்பன்னீர்சொம்பு, தட்டு, சந்தனக்கிண்ணம் இவை மூன்றும் வாங்கினால் சகாயமாய்ரூ. 7-8-0க்கு கொடுக்கப்படும். ஸ்திரீகள் தலையில் வைத்துக்கொள்ளும் தங்கத்தில் செய்த ஜடை நாகர் 1-க்கு ரூ. 4-0-0; கொண்டைக்கிளி 1-க்கு ரூ. 3-8-0. மேற்சொன்ன நகைகள் கறுக்காது என்பதற்கு உத்தரவாதச்சீட்டு கொடுக்கப்படும். ஆர்டர் அனுப்பும்போது கால், கை அளவும்கழுத்தளவும் விவரமாய் எழுதியனுப்பவும். ஒரேதடவையில் ரூ. 15-க்கு மேல்பெறுமான விலையுள்ள நகைகள்வாங்குகிறவர்களுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். எங்கள் வேலைப்பாடுள்ளவும் சுத்தமானநகைகள் எக்கம்பெனியிலும் கிடைக்கமாட்டா. எங்கள் நகைகளைப் பார்ப்பவர்கள் ஒவ்வொருநகையையும் ரூ. 300-க்கு மேற்பட்டே மதிப்பிடத்தக்கதாகவிருக்கும். விதம்விதமானமோதிரங்கள் விலை ரூ. 2. முதல் ரூ. 12 வரையிலுமிருக்கிறது. பொடிடப்பி எந்த மோஸ்தரிலும் கிடைக்கும். விலை ரூ. 2-0-0 (எந்தமாதிரி பொடிடப்பிக்கும் ஒரேவிலை). ஆர்டர் அனுப்பபட்டவர்களுக்கு வேண்டும் நகைகள் வி. பி. மூலமாய் அனுப்பப்படும். மேல்விலாசங்களை விபரமாய் எழுதியனுப்பக்கோருகிறோம்

மானேஜர்,

ஹனுமான் அண்டு கோ.,

63, பவழக்காரதெருவு, சென்னபட்டணம்.

Apply to:—கிராமாதிகாரி கெஜட், மதறாஸ்.